# திசை

THISAI

உள்ளே

★ இலங்கையில் பேச்சு வார்த்தைகளின் நடைமுறை : 1983-86

★ தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களின் குறிப்பேடு.

மேற்படி விஷயங்கள் அடங்கிய பிரதிகள் மட்டும் தனியாகப் பெற விரும்புவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திசை 2 | 23-3-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | பக்கங்கள் 14 | முகம் 10


### இலங்கைக்குள் மீண்டும் இந்தியா நுழைவதற்கான அத்திவாரம் :

# கல்கட்டின் கருத்து என்ன?

**இந்தியப்படை இலங்கையைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில், இந்தியப்படையின் உயர் அதிகாரிகளுக்கு அண்மையில் இந்தியத் தூதுவராலயத்தில் கொடுக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது, இந்தியப்படைத் தளபதி கல்கட் நிகழ்த்திய உரை பல சந்தேகங்களை அரசியல் அவதானிகளிடையே கிளப்பியுள்ளது.**

தளபதி கல்கட்டினது உரையின் முக்கிய செய்தி வருமாறு:

இந்தியப்படை இலங்கை வந்ததன் நோக்கம் இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் பாதுகாக்கவே. இலங்கையின் ஐக்கியத்துக்கு எதிராகவும், அதற்குக்குந்தகம் விளைவிக்கும் விதத்திலும் நடந்து கொள்ளும் எந்த அணியுடனும் இந்தியா இணையப் போவதில்லை.

சுயநிர்ணய உரிமைக்குமாகக் குரல் கொடுத்துவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கை ஓங்கிவரும் இன்றைய சூழலில், இது அவர்களுக்கெதிரான ஓர் எச்சரிக்கையாக அமைவது மட்டுமல்லாமல், அவர்கள் உண்மையாகவே தமது இலட்சியத்தை நோக்கி தமது கையைப் பலப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாத்தல் என்ற பேரில் இலங்கை அரசின் ஆதரவில் மீண்டும் இலங்கையுள் நுழைய இந்தியா போடும் அத்திவாரமா இது?

முன்னர் தமிழரின் பாதுகாப்பு என்றபேரில் தமிழ்மக்களின் ஆதரவோடு இலங்கையுள் நுழைந்த இந்தியா இன்று அதில் தோல்வியுற்று பின்வாங்கும் இச்சந்தர்ப்பத்தில், இலங்கையின் ஐக்கியத்துக்கான பாதுகாப்பு என்று இலங்கை அரசின் ஆதரவோடு மீண்டும் உள் நுழைய அத்திவாரம் இடுகிறதா?

இதனாலேதான் இந்தியாவின் பாதுகாப்புக் கோஷம் காலத்துக்குக் காலம் மாறுகிறதா?

கல்கட் கூறும் இலங்கையின் ஐக்கியத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் ஈழப்பிரகடனத்தைச் செய்த வரதராஜப் பெருமாளுக்கு பக்குவமாக இந்தியா பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக்கும் அதேநேரத்தில், அத்தகைய பிரிவினைச் சக்திகளுக்கு தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்று கல்கட் கூறுவதன் அர்த்தம் என்ன?

தற்போது ஈழத்தமிழ் பேசும் இனத்தின் பாதுகாப்புக்கும்,

## 32 மாதங்களின் பின்னர்

இம்மாதம் 24 ஆம் திகதியன்று, இலங்கை மண்ணிலிருந்து இந்தியப் படையின் கடைசிச் சிப்பாயும் போய்விடுவான் என எதிர்பார்க்கப்படுகிறது.

1987 ஜுலை இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக ஜே ஆர் ஆட்சியின்போது இங்கு தருவிக்கப்பட்ட இந்தியப்படை, 32மாத காலத்தங்குதலின் பின்னர் இலங்கையை விட்டுப் பூரணமாக நீங்குகின்றது.

இவர்கள் இங்கு நடாத்திய போர், தேடுதல் வேட்டை, சுற்றிவளைப்பு ஆகியவற்றின் விளைவாக வட கிழக்குப் பகுதியில் 10.000ற்கு மேற்பட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குல்திப் நாயர் புதிய ஸ்தானிகர்

வி. பி. சிங் தலைமையிலான இந்திய அரசு முக்கியமான அரச நிர்வாகங்களுக்குத் திறமை வாய்ந்த அதிகாரிகளை நியமிப்பதில் அக்கறை காட்டி வருவதாகத் தெரிகிறது. முன்பு இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் திறமைகாட்டிய அதிகாரிகள் பலர் இந்த நியமனங்களுக்குத் தெரிவு செய்யப்படவிருப்பதாகவும், தற்போது ஜம்மு காஷ்மீர் கவர்னராக உள்ள ஜக்மோகன் அத்தகையவர்களில் ஒருவரே எனச் சொல்லப்படுகிறது. இவற்றையும் விட முக்கியமாக தற்போது பாகிஸ்தான் ஸ்தானிகராக உள்ள ஜே. என். தீக்ஷித் இந்தியப் பாதுகாப்பு விவகார முதல் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் செய்திகள் வெளிவந்தன.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவிட்ட தவறுகளுக்கெல்லாம் தீக்ஷித்தைப் பலர் காரணம் காட்டிய போது, தனக்கும் அவற்றுக்கும் சம்பந்தமில்லை என்றும் தான் 'ரோ' தந்த தகவல்களுக்கேற்பவே நடந்து கொண்டதாகவும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இவரது செயற்திறமையை உத்தேசித்தே இவர் பாதுகாப்பு விவகார முதல் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். இந்த நியமன வரிசையிலேயே பிரபல பத்திரிகையாளரும் எழுத்தாளருமான குல்திப் நாயர் இங்கிலாந்தின் ஸ்தானிகராக நியமனம் பெறுவதும் அமைகிறது.

## எமது அலுமாரிகளில் எலும்புக்கூடுகள் இல்லை

அமைதிப்படையின் நடவடிக்கைகளில் 2220, எல். ரீ ரீ. யினர் கொல்லப்பட்டனர், 472 பேர் பிடிக்கப்பட்டனர், 1220 பேர் காயப்பட்டனர் அமைதிப்படையில் 1155 பேர் இறந்தனர், 2984 பேர் காயமடைந்தனர் பொதுமக்களின் பார்வையில் நடந்த போர் இது. எமது அலுமாரிகளில் எலும்புக்கூடுகள் இல்லை ....." இவ்வாறு இந்திய அமைதிப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ எஸ். கல்கட் பத்திரிகையாளரிடம் சொன்னார்.

நடந்து முடிந்த போரில் பொதுசனங்கள் பார்வையாளர்களாய் அல்ல, பாதிக்கப்பட்டவர்களாகவே இருந்தார்கள்; இருக்கிறார்கள் என்பதைக் கல்கட் ஏனோ மறந்துவிட்டார்.

## கொலையை மூடி மறைக்க எத்தனம்!

ரிச்சர்ட் சொய்சாவின் கொலையை துப்புத்துலக்காமல் அதனை மூடிமறைப்பதற்குத் திட்டமிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என S. L F. P. நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் குற்றஞ் சாட்டியுள்ளார்

## வேலை மறிப்புப் போராட்டம்

யாழ் தபால் நிலையத்தில் வேலைபார்க்கும் சமயா சமய ஊழியர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கும் நாளாந்தம் வேலை வழங்குவதில் நிகழும் ஊழல்களை நிறுத்தும்படியும், சேவை மூப்பு அடிப்படையில் வேலை வழங்கும்படியும் கோரி, தபால் நிலைய ஊழியர்கள் வேலை மறிப்புப் போராட்டத்தில் வியாழன் காலை ஈடுபட்டனர். இதனால் யாழ் தபாலக வேலைகள் எல்லாம தடைப்பட்டன,

ஊழியர்கள் முன்வைத்த 6 அம்சகோரிக்கைகளை 24 மணி நேரத்துள் நிறைவேற்றுவதாக தபால் அத்தியட்சகர் அளித்த வாக்குறுதியின்பேரில, போராட்டம் கைவிடப்பட்டது.

## கலாபவனம் அமைய இதுவோர் ஆரம்பம்

செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவு ஓவியக் கண்காட்சியை ஏன் ஒழுங்குபடுத்தியதென்று, யாராவது கேட்கக் கூடும், எமது சங்கம், எமது மக்களின் பல்வேறு கஷ்டங்களை நீக்க உதவிவருகிறது. சில வளர்ச்சியும் இங்கு தடைப்பட்டிருக்கிறது. ஒரு இனத்தைப் பொறுத்தவரை தனித்துவம் முக்கியமானது எமது வாழ்க்கை முறை, அரசியல, தனித்துவம் ஆகியவற்றை கலை மூலம் பேணும முகமாகத்தான் ஆக் கண்காட்சியை ஒழுங்கு செய்தோம்"

சென்ற சனிக்கிழமை யாழ்-இந்துக்கல்லூரியில் ஓவியர் அ. மாற்குவின் 'இன்னொரு முகம்' என்ற தலைப்பிலான ஓவிய — சிற்பக் காட்சியின் ஆரம்ப நிகழ்ச்சியில் உரையாற்றிய, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவின தலைவர் டொக்ரர் இ. தெய்வேந்திரன் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது: "கலாபவனம் போன்றவை இங்கு அமைக்கப்படுவதற்கும், இத்தகைய கண்காட்சி ஓர் ஆரம்பமாகலாம்.

முதுபெரும் ஓவியர் க. கனகசபாபதி பிரதம விருந்தினராக இந் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

### உயிரோடு மின்கம்பத்தில்

வியாழன் காலை யாழ். பஸ்நிலையத்தில் ஒரு வாலிபன் மொட்டையடிக்கப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார். இவர் ஒரு போதைப் பொருள் வியாபாரி எனத் தெரியவருகிறது. இம்மாதிரிக் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை, கொலை செய்யாது உயிரோடு மின்கம்பத்தில் கட்டிவைத்தமை வரவேற்கத்தக்கது எனப் பொது சனங்கள் பேசிக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் அமைதிப்படையினர் விலக ஆரம்பித்ததிலிருந்து கொலைகள் வெகுவாகக் குறைந்துவிட்டமையும், இப்போது வீதிகளில் பிணங்களைக் காணவே முடிவதிலலை என்பதும் குறிப்பிடத்தககதாகும்.

திசை THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்—ரூபா: 300/-
அரைவருடம்—ரூபா: 150/-

இந்தியா
ஒரு வருடம்—ரூபா: 850/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் —
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் —
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு.
த. பெ. 122.
யாழ்ப்பாணம்

# இந்திய அமைதிப்படைக்கு ஜே. ஆரின் பாராட்டு

இந்திய அமைதிப்படையினரின் உயரதிகாரிகளுக்கு, அண்மையில் கொழும்பிலுள்ள இலங்கையின் இந்தியத் தூதுவரால் பிரிவுபசார வைபவம் ஒன்று, ஒழுங்கு செய்யப்பட்டது. மேற்படி வைபவத்தில் கலந்து கொண்ட முன்னைய ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அமைதிப் படைக்கு, பாராட்டுத் தெரிவித்துள்ளார். இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கவும், அதன் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தவும் கடந்த 2½ வருடங்களாக இந்திய அமைதிப்படை பங்குபற்றி பணியாற்றியதாகவும், தமது அழைப்பின் பேரில் இங்குவந்து பணியாற்றிய அவர்களுக்கு, தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதாகவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படைக்குப் பாராட்டுத் தெரிவிக்கு முன்பு வேறொரு வைபவத்தில் கலந்து கொண்ட ஜே. ஆர். இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாத்து வருவதற்காக ஜனதிபதி பிரேமதாஸாவுக்கும் பாராட்டுத் தெரிவித்தார். இந்திய அமைதிப்படையினரின் வெளியேற்றத்திற்குக் காலக் கெடு விதித்து அவர்களை வெளியேற்ற பலவித நடவடிக்கைகளை எடுத்த பிரேமாவுக்கும் பாராட்டுத் தெரிவித்துவிட்டு, அதே வாயோடு அமைதிப்படையையும் பாராட்டியுள்ளார். இலங்கை அரசின் சார்பில் அமைதிப்படைக்கு உபசாரம், செய்யவோ அவர்கள் பணியைப் பாராட்டவோ யாரும் அற்ற நிலையில், தாமே அவர்களை இங்கு முந்திய அரசின் சார்பில் வரவழைத்தமைக்கு இன்று தனிமனிதனுக நின்று பாராட்டவும், கோடிக்கணக்கான பணத்தையும் 1500 க்கு மேற்பட்ட படையினரையும் இழந்து அமைதிப் படை ஆற்றிய பணிக்கு நன்றி செலுத்தவும் செய்திருக்கிறார். பாவம்! தனிமனிதனுக நின்றேனும் தனது அழைப்பை ஏற்று வந்தவர்களுக்கு நன்றியும் பாராட்டும் நிகழ்த்த வேண்டிய பரிதாபநிலை ஜே. ஆருக்கு நேர்ந்திருக்கிறது.

இதேவேளை ஜே. ஆரால் பாராட்டப்பட்ட பிரேமதாஸா அவர்கள் சமீபத்தில் தெரிவித்த கருத்துகளை, திருப்பி, ஜே. ஆருக்கு நாம் சமர்ப்பிக்கலாம்: "இலங்கையில் எந்தப் போராட்டத்தை அடக்குவதற்காக இந்திய அமைதிப்படை இங்கு வந்ததோ, அந்தப்பணியைப் பூர்த்தி செய்ய முடியாமலேயே திரும்பிப் போகிறது. அவர்கள் இங்கு ஏராளமான அப்பாவிப் பொதுமக்களை அழித்ததும், ஏராளமான பொதுமக்களின் சொத்துக்களை அழித்ததும்தான் அவர்கள்'' இங்கு ஆற்றிய பணி - இவைதான் பிரேமதாஸா சொன்னவை.

# இராணுவ ரீதியாக இறந்துவிட்டது; அரசியல் ரீதியாக உயிர் வாழ்கின்றது!

## ராணுவத்தினர் குடும்பங்கள் ஏன் தாக்கப்பட்டன?

ஜனத்தா விமுக்தி பெரமுன ராணுவ ரீதியாக இப்பொழுது செயலிழந்து இருப்பினும், அரசியல் ரீதியாக இன்னும் உயிர்த்துடிப்புடன் உள்ளது என 39 வயது நிரம்பிய மாகாணத் தலைவராக இயங்கிய ஒரு ஜே. வி. பி. தலைவர் சிறையிலிருந்து பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

'டெய்லி நியூஸ்'சிற்கு அவர் அளித்த பேட்டியின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்:

''புரட்சியை நோக்கி இந்த நாட்டிலே ஒரு வெகுஜன இயக்கம் தோன்றிச் செயற்பட்டது உண்மையே. புரட்சி நிகழ்வதற்கான சரியான நேரம் வந்ததும் நானும் என்னைப்போல நூற்றுக்கணக்கானவர்களும் ஜே. வி. பியில் சேர்ந்தோம்.

அப்பொழுது எமது நோக்கம், இவ்வாறு இயக்கத்தில் சேர்ந்து செயற்படுவதன் மூலம் எமது மக்களுக்கும், எமது நாட்டுக்கும் சேவை செய்து அவர்களின் செயலில் மாற்றத்தை ஏற்படுத்துவதே. இப்பொழுது புனருத்தாரணத்தைப் பற்றிக் கதைக்கிறார்கள். இவ்வாறு கதைப்பவர்கள் நான் மேலே குறிப்பிட்ட அம்சத்தை மனதில் கொள்ள வேண்டும். எமது போராட்டம் அழிவை ஏற்படுத்தினலும், மாற்றத்தை நோக்கிய ஒன்ருக இருந்தது என்பதை அவர்கள் உணர வேண்டும். புனருத்தாரணம் என்னும்போது எம்மையும் எமது உளப்பாங்கையும், எமது சமூகக் கோட்பாடுகளையும், எமது செயல்முறைகளையும், மாற்றுவதாக அமைய வேண்டும். நான் இன்று உயிரோடிருப்பதே புனருத்தாரணத்திற்குச் சான்று பகர்கிறது''

ஜே.வி. பி. யைப்பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் "அது ஒருங்கிணைந்த ஒற்றுமை வாய்ந்த இயக்கமாக இருந்ததில்லை என்றும் அவ்வாறு அது இருந்திருக்குமாயின் இன்றைய நிலைமையே முற்றிலும் வேருயிருந்திருக்கும்'' என்றும் சொல்கிறர், ''மத்திய கொமிட்டி உறுப்பினராக நான் இருந்தேன். நாங்கள் தான் தீர்மானங்களை எடுத்தோம். அவற்றை நடைமுறைப்படுத்தவும் நாங்கள் தான் பொறுப்பாக இருந்தோம். ஆனல் கட்சிக்குள் ராணுவப் பகுதியொன்று உருவாக்கப்பட்டதும், மரபு வழித்தலைவர்கள் தமது அதிகாரங்கள் சிலவற்றை இழந்தனர். எமக்குத் தெரியாமலேயே எத்தனையோ விடயங்கள் நடந்தன.''

இதனை உதாரணப்படுத்துவதற்கு அவர் கூறியதாவது: ''இராணுவத்தினரின் குடும்பங்களைத் தாக்குவதற்கு எடுத்த முடிவு பற்றி எனக்குத் தெரியாது, அதை நான் அங்கீகரிக்கவும் இல்லை. ஆயுதந் தாங்கியவர்கள், சீரழிவுக்கு உட்பட்டு கட்சியின் முடிவுகளுக்குச் செவிசாய்க்கவில்லை. அவற்றை மதிக்கவுமில்லை''

அவர் மேலும் கூறியதாவது:

''இங்கே நடைபெற்ற எதையும் பற்றி நாம் கதைக்கமுடியாது. ஆனல் அழுது குழறும் அளவுக்கு அவ்வளவு மோசமாக ஒன்றும் நடக்கவும் இல்லை. நாம் தேசத்தின் மக்களின் கண்களைத் திறக்கச் செய்வதில் வெற்றிபெறவில்லையா? நம் அதிகாரிகள் யதார்த்தத்தை உணரச் செய்வதில் நாம் வெற்றிபெறவில்லையா?''

''நடந்து முடிந்தவற்றைப் பற்றி நீங்கள் மனவருத்தம் அடையவில்லையா?'' என பேட்டிகண்ட மோகன் சமரசிங்க கேட்டதற்கு அவர் சொன்ன பதில் வருமாறு; ''என்னுடைய கனவுகளில்பங்கு கொண்டவர்கள், என்னுடன் கூட இருந்து சாப்பிட்டவர்கள், அவர்கள் எல்லோரும் இறந்துபோய் விட்டார்கள். எத்தனையோ ஆண்டு காலப் போராட்டத்துக்குப் பின்னர் நாம் இப்படி மடிந்ததையிட்டு மனம் வருந்துகிறேன்.''

கேள்வி: அப்படியென்ருல் எல்லாம் முடிந்துவிட்டதா?

பதில்: ஜே. வி. பி. யை இன்று செயலிழக்கச் செய்யும் வேகத்தில் ஆயுதந்தாங்கிய குழு என்ற ரீதியில் கட்சி முடிந்துவிட்டது. ஆனல் அரசியல் ரீதியாக சிலவேளை சிதறிய பாகங்களை மீண்டும் ஒருங்கிணைத்து இயங்குவதற்குச் சாத்தியமுண்டு.

# சிறுவர் நூல் வெளியீடு

இளமையில் ராணுவ வாழ்வை ருசித்திட்ட லெப்ரினன்ற் சாள்ஸ், பின்னர் அந்த வாழ்வின் போதாமையை உணர்ந்து வெறுத்து, பிறதர் சாள்ஸ் ஆகி ஏழை முஸ்லிம் மக்களின் துயர் துடைத்து இன்னெரு கிறிஸ்துவாக வாழ முற்பட்டவர் சாள்ஸ் தி ஃபுக்கோ.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளரான சுவாமி ஜெயசீலன் கவிஞர் பா. சத்தியசீலன் எழுதிய புரட்சித் துறவி சாள்ஸ் தி ஃபுக்கோவின்கதைப் பொழிவு சிறுவர் நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்வெளியீட்டு விழா 12ந் திகதி திங்கட்கிழமை யாழ் அடைக்கல மாதா கோவில் கலாமண்டபத்தில் நடைபெற்றது.

நூல் ஆசிரியர் கவிஞர் பா. சத்தியசீலன் நன்றி தெரிவித்துப் பேசினர்.

# ரஷ்யாவில் தனிச் சொத்துடைமை

கடந்த வாரம்கொண்டுவரப்பட்ட சட்டமூலம் ஒன்றின் மூலம் தனியார் சொத்துடைமைக்கு ரஷ்யாவில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் விவசாய பொருளாதாரத்தை ஊக்குவிக்க இந்தப் புதிய சட்டம் வழிவகைகளை ஏற்படுத்தும் என்று பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தனியார் சொத்துடைமைகளுக்கான உரிமை சோவியத் யூனியனில் 60 ஆண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்டது. சிறிய தனியார் வியாபார நடவடிக்கைகளும் இக் காலத்தில் தேசியமயமாக்கப்பட்டன.

இந்த தனியார்சொத்துரிமை மீதான சட்டமூலம் சோஷலிஸப் பொருளாதார அமைப்பில் எந்த மாற்றத்திற்கும் வழிவகுக்காது. மாருக, சோஷலிஸ பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பவும் ஒரு மனிதன் எவ்வளவு சொத்தினை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும் எனவும் இச் சட்டம் நிர்ணயிக்கும் என ஒரு பிரதிநிதி தெரிவித்தார்.

சமீபத்தில் மேற்கொண்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 70 சதவீதமானேர் தனிப்பட்ட சொத்துரிமைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# இலவசம்

கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் குருகுலம் தாபித்த தொண்டர் அப்பு அமரர் வெ. கதிரவேலு அவர்கள் புகைப்படம் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. தேவையானேர் "மில்க்வைற்'' ஸ்தாபனத்தில் நேரிலோ அல்லது ரூபா 5/-க்கு முத்திரை அனுப்பியோ படத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

# புதுவருடக் கொண்டாட்டம்

நல்லூர் உதவி ஆணையாளர் பிரிவில் எதிர்வரும் சிங்கள-தமிழ் புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள் ஏப்ரில் 1990 தொடர்பாக நடாத்தப்படும். இவற்றில் விளையாட்டுப் போட்டி கவிதைப்போட்டி நடைபெற இருக்கின்றன, போட்டிகள் பற்றிய விபரங்களை நேரில் சென்று அறிந்து கொள்ளலாம்.

# வத்திக்கான் தூதுவர் யாழ். வருகை

இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர், பேரருள் திரு. பிரான்சுவர் பக்கே நாளையிலிருந்து (24 ஆந் திகதி) யாழ். நகருக்கு 3 நாள் விஜயத்தை மேற் கொள்ளவுள்ளார்.




மில்க்வைற்
சலவைப் பவுடரின்

சக்தி வாய்ந்த நுரை நூலிழைகளில் நுழைந்து அழுக்கை அறவே அகற்றுகிறன்து. குடும்பத்தின் சகல சலவைகளுக்கும் உகந்தது.

சிரமமற்ற சலவை

450 கிராம் பக்கற்றிலுள்ள கூப்பனை முழுமையாக வெட்டி அனுப்பி கவர்ச்சிகரமான பொலித்தீன் பையை உங்களுடையதாக்குங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

# இந்தியா கடைப்பிடித்த காந்தீயம்

சரண்யன்

இந்தியத்தூதுவர் மெஹ்ரோத்ரா அவர்கள் அண்மையில் தெரிவித்த சில கருத்துகள் வேடிக்கையாகவும், தங்கள் முதுகில் தாமே தட்டிப் பாராட்டிக் கொள்வதாகவும் இருந்தன. ஜே ஆரைத்தவிர இந்த பாராட்ட யாருமே இல்லாதபோது பாராட்டுரையின் மீதியைத் தாமே நிரப்பிக்கொண்டதாகவும் இந்திய அமைதிப் படையினரின் பிரிவுபசார வைபவத்தில் அவர் தெரிவித்த கருத்துகள் அமைந்திருந்தன.

"ஒரு நாட்டின் நன்மைக்காகவும் அதன் இறைமைக்காகவும் இன்னொரு நாடு இரத்தம் சிந்தியது ஓர் அரிதான உதாரணமாகும். உன்னதமான இலட்சியங்களுக்காக இந்தியா இரத்தம் சிந்தியது" இது அவரது பேச்சின் ஒரு சிறுபகுதி. ஒரு நாட்டின் நன்மைக்காகவும் அதன் இறைமைக்காகவும் தான் இந்தியா இங்குவந்து இரத்தம் சிந்தியது என்பதை இலங்கை அரசும் மக்களும் சொல்ல வேண்டும். மாறாக இந்திய அமைதிப் படை இங்கு நிலைகொண்டிருந்ததால் இலங்கையின் இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டிருப்பதாகவேதான் இலங்கை அரசும் தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்களும் கருதினார்கள். பிழையான ஒரு ஒப்பந்தத்தினை தமிழ் மக்கள்மீது திணித்ததன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குரிய போராட்டத்தையும் அதற்கான உண்மையான தீர்வையும் மழுங்கடித்து, அதை நிறைவேற்றுவது என்ற பேரில் வடக்கு — கிழக்கில் தமிழ் பேசும் மக்கள்மீது எல்லையற்ற ஒடுக்குமுறையைக் கையாண்டது இந்தியா. இதை தென்னிலங்கையில் உள்ளவர்கள் வரவேற்பார்கள் என்றும் இந்தியா சிங்கள மக்களினதும் சிங்கள அரசினதும் சார்பில் செயற்படுகிறது என்றும் இந்தியா எண்ணியது. ஆனால் என்ன நடந்தது? அங்கும் இந்தியப்படையினர் இங்கு நிலைகொண்டிருப்பதை மையமாக வைத்தே ஜே.வி.பி போராட்டம் தொடங்கி தென்னிலங்கையிலும் அரசின் இறைமைக்கு குந்தகம் ஏற்படலாயிற்று. இதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் இரத்தம் சிந்த வைக்கப்பட்டது போலவே, தென்னிலங்கையிலும் ஏராளமான மக்களும், ஆளுநரும் படையினரும் இரத்தம் சிந்தினர். இதன் அர்த்தம் என்ன? இந்தியா இன்னொரு நாட்டின் இறைமையைக் காக்க இரத்தம்சிந்த வரவில்லை. (இரத்தம் சிந்த வேண்டியநிலை தமக்கு ஏற்படுமென்று அவர்கள் கருதியிருக்கவில்லை. எல்லாம் சுலபமாய் சுமுகமாய் முடியும் என்றே எதிர்பார்த்தனர்) இன்னொரு நாடு இரத்தம் சிந்தவே வந்தது என்பதேதான், வரலாற்றில் இது ஓர் அரிய உதாரணம் என்று இவர் கூறியது மற்றையவர்களை வரலாற்றுக் குருடர்களாக நினைத்துக் கொண்ட கோளாறு ஆகும். உலக வரலாற்றில் தமது பிரதேச நலனுக்காக வேறொரு நாட்டினுள் புகுந்து இரத்தம் சிந்தவைத்த உதாரணங்கள் பல உண்டு.

மெஹ்ரோத்ரா இவ்வாறு பேசியதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் வேறுயாருமல்ல. இந்திய அமைதிப்படையை வரவேற்றுப் பிரியாவிடையும் வழங்கிப் பேசிய ஜே ஆர்தான் "இந்தியா தனது 1500க்கு மேற்பட்ட படையினரை இழந்தும் பலகோடி ரூபாய்களைச் செலவிட்டும் தியாகம் செய்ததற்கும்" தமது நன்றியைத் தெரிவித்திருந்தார். இதற்குமுன் பொருமுறை ஜே. ஆர் கருத்துத் தெரிவித்தபோதும் "எங்களுக்குப் பதிலாக இந்தியா சண்டை பிடித்தது. எங்கள் வீரர்கள் இறப்பதற்குப் பதிலாக இந்தியப் படையினர் இறந்தார்கள்" என்றும் குறிப்பிட்டார். இதை நாம் மறுபக்கமாகத் திருப்பிப் பார்ப்போம். ஈழத்தமிழ்ப் போராளிகளையும் தமிழ் பேசும் மக்களையும் நாங்கள் அழிப்பதற்குப் பதிலாக அவர்கள் அழித்தார்கள். நாங்கள் அவர்களை இரத்தஞ் சிந்தவைப்பதற்குப் பதிலாக இந்தியப்படையினர் இரத்தஞ் சிந்த வைத்தார்கள். யாரைச் சாதகமாக வைத்து நீங்கள் செயற்பட்டீர்களோ அவர்களை நீங்களே கவனியுங்கள். இதுதான் அவரது பேச்சின்சாரம். ஆக இந்தியா செய்ததெல்லாம், இதைத்தான். இந்த வரலாற்று மோசடியை ஓர் உதாரணமாகக் குறிப்பிடுவதற்கு மெஹ்ரோத்ரா வெட்கப்பட வேண்டும்.

மெஹ்ரோத்ரா மேலும் பேசும் போது தெரிவித்த கருத்தில் காந்தியையும் துணைக்கு அழைத்திருக்கிறார். "இந்தியா சுதந்திரம் எய்துவது என்பது தனது நன்மைக்காக மட்டுமல்ல தனது அண்டை அயலிலுள்ள சிறிய நாடுகளின் சுதந்திரத்துக்காகவும் அதற்கு குந்தகம் ஏற்படாதிருக்கவும்தான்" என்று காந்தி சொன்னதாகவும் அதற்கேற்ப இந்தியா செயற்பட்டதாகவும் கூறினார். காந்தி கருதியது இதையா? ஒரு சுதந்திரம் அடைந்த நாட்டிற்கு இன்னொரு அந்நிய சக்தியின் அபாயத்திற்கு எதிராக, படையெடுப்புக்கு எதிராக உதவுவது பற்றியே இருக்கும். ஆனால் இலங்கைநாடு தனக்குள்ளேயே சிறுபான்மையினர் பிரச்சினை, இந்திய வம்சாவழியினர் பிரச்சினை என்று ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை நசுக்கி எறிவதைப் பற்றியா சொன்னார்? இதன் சாக்கில் இந்தியா ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்தவா சொன்னார்? வரலாற்றில் தமக்கு ஏற்பட்ட அபகீர்த்தியையும், புண்ணையும் மறைக்க காந்தியக் கதராடை தேவைப்படுகிறது. ஏனைய விஷயங்களில் காந்தியத்தை கண்டபடி கொலைசெய்வது பற்றியெல்லாம் இவர்களுக்கு கவலையில்லை ஜே. ஆரும்தான் காந்தியம் பேசுவார் நடைமுறையல்லவா இவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகிறது. □

# 25,000 குருடர்கள் பார்வை பெற்றனர்!

மல்லிகா வணிகசுந்தர

ஜப்பானைச் சேர்ந்த சயூரி வட்டனபே 1980 ஆம் ஆண்டு தனது 17ஆவது வயதில் கண் பார்வையை இழந்தார். இலங்கை தானமாக அளித்த விழிவெண்படலத்தைப் பொருத்தியமையினால் இன்று அப்பெண் தனது சுயவாழ்க்கையை வாழ்கின்றார்.

சயூரியைப் போன்ற 25 000 குருடர்கள் இன்று இலங்கை அளித்த கண்களினூடாகப் பார்க்கின்றனர். அவர்கள் 57 நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

டொக்ரர் ஹட்சன் சில்வா அவர்களால் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கண்தான சங்கம், இன்று உலகிலேயே மிகவும் பெரிய கண்தான சங்கமாகத் திகழ்கின்றது. சென்ற ஜூன் மாதம் வரை 25,000 விழிவெண் படலத்தைத் தானம் செய்துவிட்டது அது.

இறந்தவர்களின் விழிவெண் படலங்களை வெட்டி எடுத்து, பார்வை இழந்தோரின் கண்களில் பொருத்துவதற்காக இலவசமாக அச் சங்கம் வழங்குகிறது அவைகளைப் பத்திரப்படுத்தி அனுப்பிவைக்கும் செலவுகளை மட்டும், அரசாங்கங்களிடமிருந்தும் ஆஸ்பத்திரிகளிடமிருந்தும் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் இலங்கைக் கண்தான சங்கம் பெறுகின்றது.

1950 ஆம் ஆண்டுகளில் ஹட்சன் சில்வா ஒரு மருத்துவ மாணவன். பார்வை இழந்தோருக்கு விழிவெண் படலத்தைப்பொருத்தும்சிகிச்சை அப்பொழுதான் இலங்கையில ஆரம்பிக்கப்பட்டது. அவருக்கு அப்பொழுது ஒரு எண்ணம் தோன்றியது. விழிவெண படலத்தை இலங்கையில் சேகரிக்க ஆரம்பித்தால் என்ன என்பதுதான் அது.

கண் வைத்திய நிபுணராகப் பட்டம் பெற்று அரசாங்கத்தில் சேவை செய்ய ஆரம்பித்தும், கண்தான இயக்கமொன்றைத் தொடங்காமல் இருப்பதற்காக அரசாங்க கண் ஆஸ்பத்திரி நிர்வாகத்தைக் கண்டித்தார் அவர். கிடைத்த பரிசு வேலை நீக்க உத்தரவு.

வேலையும் போய்விட்டதால், தனது விருப்பைச் செயலாக்க டொக்ரர் ஹட்சன் சில்வாவுக்கு நிறைய அவகாசம் கிடைத்தது. அந்தக் காலத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவோரின் விழிவெண் படலங்களையே கண் வைத்தியர்கள் பெற்று வந்தனர். 1959 ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டதும்அந்த மூலம் அடைபட்டது.

மக்களிடமிருந்து விழிவெண்படலங்களைத் தானமாகப் பெறலாம் என்று டொக்ரர் சில்வா ஆலோசனை கூறினார். உயிருடன் இருக்கும் போதே தானம் செய்யலாம்; இறந்ததும் விழிவெண் படலத்தை எடுக்கலாம் என்பதே அவரின் ஆலோசனை. ஆனால் மற்றகண் வைத்திய நிபுணர்கள் கேலி செய்தனர். அவர்களின கேலிப் பேச்சு நீண்டகாலம் நிலைக்கவில்லை. மக்கள்பலர் தாமாகவே முன்வந்து கண் தானம் செய்தனர் 1958ஆம் ஆண்டிற்குள்ளேயே இலங்கையின் தேவைக்கும் அதிகமான கண்கள், அவருக்குக்கிடைக்க ஆரம்பித்தன மேலதிக விழிவெண் படலங்களைத் தானம் செய்யத் தயாராக இருப்பதாக உலகிலுள்ள கண் ஆஸ்பத்திரிகள் யாவற்றிற்கும் அவர் அறிவித்தார்.

இன்று 564,000 இலங்கையர் கண்தானம் செய்வதற்கான வாக்குறுதிகளை அளித்துள்ளனர் தாங்கள் இறந்ததும் தங்கள் கண்களைத் தருவதாக.

டொக்டர் சில்வா 1964ஆம் ஆண்டில் முதலாவது கண் தொகுதியைச் சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்தார். கண்களைச் சுடுதண்ணிப் போத்தலுக்குள் போட்டு பனிக்கட்டியால் குளிரச்செய்து அனுப்பினர். இரண்டாவது தொகுதி எத்தியோப்பியாவுக்கு அனுப்பப்பட்டது. நாற்பத்தேழு கண்களைக் கொண்ட அந்தத் தொகுதி, லண்டன் ஊடாக 'அடிஸ் அபாபா' நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அன்றிலிருந்து பெருவளர்ச்சி அடைந்து வந்துள்ளது, கண் தான சங்கம். பண உதவியும் மற்ற உதவிகளும் உலகெங்கணுமிருந்தும் கிடைத்தன; அத்துடன் புகழும் பெருகியது. பங்காளாதேசைச்சேர்ந்த முக்கிய குடும்பத்தினர், பிரித்தானிய ஆஸ்பத்திரி ஒன்றிற்கு விழிவெண்படலத்தைப் பொருத்தும் சிகிச்சை செய்யச் சென்றபோது, இலங்கைக்குச் செல்லுமாறு கூறி அனுப்பினர்.

கண் சிகிச்சையால் பணக்காரர் மட்டுமல்ல ஏழைகளும் பயன்பெற்றுள்ளனர். 45 நாட் குழந்தையாக இருக்கும் போது தங்களின் பார்வையை இழந்த ஐயந்தி சுந்தரத்திற்கு, 1988 ஆம் ஆண்டு கண்பார்வை கொடுக்கப்பட்டது. மலேஷியாவைச் சேர்ந்த சிறுமி அவர்.

கெனியாவைச் சேர்ந்த ஐசாக் மயூராவும் ஸ்ராலி சஞ்சுவும் இலங்கைக் கண்களுடன இப்பொழுது பார்க்கிறார்கள். ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்கள் பிரதம மந்திரியாக இருந்தபோது, அவ்விருவரையும் சந்தித்து மகிழ்ந்தார்.

வியட்நாம் யுத்தத்தின் போது பார்வை இழந்த சிறுவர்களுக்கு, அமெரிக்கக் கப்பல்களில் இலங்கைக் கண்களைப் பொருத்தியுள்ளனர். அவை இலங்கையிலிருந்து சைகோனுக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து ஹெலிகொப்ரர்கள் மூலம் கப்பல்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இலங்கையின் தேவைக்கதிகமான விழிவெண் படலங்கள் யாவற்றையும் எடுக்க, 1967ஆம் ஆண்டில் பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்தது. அதிக அளவு இலங்கைக் கண்களைப் பெற்ற நாடு பாகிஸ்தான்தான்.

வெளிநாடுகளின் தேவையைக் கவனிப்பதற்காக சர்வதேச கண்வங்கி 1965ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ஆண்டுதோறும் 200 முதல் 500 கண்களை அனுப்பும் இலக்கை, அது இப்போது வைத்திருந்தது. இன்றைய இலக்கு ஆண்டுக்கு 2000.

"விமானங்கள் செல்லும் நேர அட்டவணை நாம் கவனமாக ஆராய்ந்துள்ளோம்" என்கிறார் டொக்ரர் சில்வா. "விமானம் புறப்படும் சமயம் கண்களைக் கொண்டுபோய் ஒப்படைத்து விடுவோம்" என்கிறார் அவர்.

ஆரம்பத்தில் ஒரு கண்ணை 34 மணிநேரந்தான் பாதுகாத்து வைக்க முடியும். இப்பொழுது மூன்று முதல் ஐந்து வாரங்கள் வரை வைக்கலாம். இதன் விளைவு: கிராமப் புறங்களுக்கும் கார்கள், ரயில்கள் மூலம் கண்களைக் கொண்டு செல்லலாம்.

நன்றி: இலங்கைச் சூழல் கொங்கிரஸ் □

# உடலும் மனமும் ஒய்வு, அமைதி பெறுவது எப்படி?

முக்கிய கருமமாகக் கந்தசாமி வெளியே புறப்பட ஆயத்தமாகிறான். அவனுக்குப் பிடித்தமான உடை சூட்கேஸ் ஒன்றில் அடுக்கிப் பூட்டி வைக்கப்படுகிறது. திறப்பை எடுத்துத் திறந்து பார்த்தான்; முடியவில்லை. வெகு பிரயாசைக்குப் பின்னரே பூட்டுத் திறந்துகொண்டது. பூட்டு ஏன் இப்படி 'மக்கர்' பண்ணியது? பூட்டில் ஏதாவது கோளாறு என்று ஆராய்ந்தான்; பூட்டு ஒழுங்காகத்தான் இருக்கிறது. அப்போ, என்ன நேர்ந்தது இந்தப் பூட்டுக்கு? பெட்டி கொள்ள முடியாத அளவுக்கு உடுப்புகளை அதற்குள் அமுக்கி வைத்திருந்ததால் பூட்டால் இயல்பாக இயங்க முடியவில்லை. அதை உணர்ந்த அவன், சில உடுப்புகளை அதனின்றும் வெளியே எடுத்தான். பின்னர் பூட்டைத் திறந்து பூட்டிப் பார்த்தான். அது சுலபமாக இயங்கியது. உள்ளே விரவியிருந்த இறுக்கந்தான் அது 'மக்கர்' செய்ததற்குக் காரணம்.

மேலெழுந்தவாரியாக இதை நோக்கும்போது இது ஒரு மிக மிகச் சாதாரண விஷயம். ஆனால் உளவியல் ரீதியாக இந்தச் சம்பவத்தை நுண்ணாய்வு செய்வோமானால், இது ஒரு சுவாரஸ்யமான விஷயம். ஏனெனில், வாழ்க்கையின் ஒரு முக்கியமான உண்மையை இது சமாந்திரமாக விளக்குகிறது.

## மனதில் அமுக்கம்

நாளாந்தம் பல பிரச்சினைகளை நாம் மனதில் போட்டு இறுக மூடிவைத்திருக்கிறோம் இதனால் எமது மனமும் இயல்பாக இயங்க முடியாது உள்ளுக்குள்ளே இறுகித் தவிப்பதை நாம் உணர்வதில்லை. இதனால் நாம் நிதானத்தை இழக்கிறோம்; பதட்டம் எம்மை ஆட்கொள்கிறது.

நாள் முழுவதும் கடுமையாக வேலைசெய்துவிட்டு வீடு திரும்புகிறான் கந்தசாமி. அவன் களைத்துச் சோர்வுடன் வீடு திரும்பும் போது சில பிரச்சினைகளையும் தன் தலைக்குள் திணித்துக் கொண்டு வருகிறான். இரவு சாப்பிட்டு விட்டுப் படுக்கிறான். அவன் மறுநாட்காலை எழும்பும்போது களைப்பும், சோர்வும் நீங்கி உற்சாகமாக அன்றைய தன் கடமைகளைச் செய்ய ஆரம்பிக்கிறான். இரவு அப்படி என்ன அதிசயம் நடந்தது? வேறொன்றுமில்லை; இரவில் அவனுக்குக் கிடைத்த அமைதியான உறக்கமும் ஒய்வுந்தான் அவனின் புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்திற்குக் காரணம்.

## ஒய்வு புதுச் சக்தி பாய்ச்சும்

உழைப்பால் களைத்துப் போகும் உடலுக்கும், பிரச்சினைகளால் சோர்ந்துபோகும் மனதிற்கும் (மூளை) ஒய்வு (Relaxation) ஒன்றினால்தான் புதுச் சக்தியைப் பாய்ச்சிப் புத்துணர்வு ஊட்டமுடியும். இந்த ஒய்வு என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் மாத்திரமல்லாது, ஆத்மார்த்தமான சாந்திக்கும் வழிவகுக்கிறது என்பது ஞானிகளும் யோகிகளும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். சும்மா இருத்தல் என்பது இதுதான் போலும்.

களைத்த உடலும் சோர்ந்த மனமும் எம்முள் ஒளிந்திருக்கும் மறைசக்தி (Latent Power) மூலம் புத்துணர்வூட்டப்படுகின்றன. இவ்வாறு உடலுக்கும் மனதிற்கும் (மூளை) புதிய சக்தி பாய்ச்சப்படுவதற்கு ஒய்வு மிக அவசியமாகும். ஏனெனில், ஒய்வின் வழியேதான் இவை புதிய சக்தியை மறைசக்தியினின்றும் பெறுகின்றன.

நாம் எப்படி இருக்கிறோம் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியும். ஆனால், நாம் எப்படி இருப்போம் என்பதை எவராலும் அறிந்து கொள்ள முடியாது.

## மூன்று நன்மைகள்

ஒய்வினால் நாம் மூன்று வகையான நன்மைகளை அடைகிறோம். முதலாவதாக, அது அளிக்கும் அமைதியும் உள் ஒளியும் எந்த ஒரு பிரச்சினையையும் அதற்குரிய வகையில் அணுகுவதற்கு எமது உடலையும் மனதையும் தயார் நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதன்மூலம் பிரச்சினைகளைத் துணிவோடும், நம்பிக்கையுடனும் நாம் தீர்த்துக் கொள்வதற்கு வழிகோலுகிறது.

□ ச. ம. அச்சுதன் □

இரண்டாவதாக, ஒய்வானது மூளையினதும் உடலினதும் தசைநார்களின் இறுக்கத்தைத் தளர்த்தி மீண்டும் எம்மை ஒரு புதிய மனிதனுக்கி செயலாக்கத்திற்கு வழிநடத்திச் செல்கிறது.

மூன்றாவதாக, ஒய்வு எமது நனவு மனத்திற்கு (Conscious Mind) ஒரு விசேட விடுப்பை (Special Leave) அளிக்கிறது இதன்மூலம் எமது நனவிலி மனம் (Unconscious Mind) தன் கருமத்தைச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறது. இந்த நனவிலி மனத்தின் செயற்பாட்டினாலே தான் எமது மறைசக்தி அலைத்தும் வெளிக்கொணரப்பட்டு, எமது ஆக்கசக்தியும் காதல் உந்து சக்தியும் ஊக்குவிக்கப்படுகின்றன.

அநேகமான சிந்தனைவாதிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், தங்களின் சாதனைகளுக்கு இந்த நனவிலி மனத்திறகே நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறார்கள்; நனவு மனதிற்கு அல்ல.

கால் கைகளை 'அக்கடா' என்று எறிந்து, கண்மூடி உறங்குவது மட்டுந்தான் ஒய்வு எடுக்கும் முறை என்பது பலரின் தப்பபிப்பிராயமாகும்.

## இருவகை ஒய்வு

ஒய்வு இருவகைப்படும், ஒன்று ஏதாவது ஒரு மனதிற்குப் பிடித்த கருமத்தை ஓடியாடிச் செய்து கொண்டே ஒய்வு பெறுவது (Active Form). அடுத்து ஒரு இடத்தில் நிலையாக இருந்தவாறு மனதை ஒருநிலைப்படுத்தி ஒய்வு பெறுவது (Passive Form).

நீங்கள் நாள் முழுவதும் உடலால் கடுமையாக உழைப்பவர்களாக இருந்தால் மனத்தின் (மூளை) செயற்பாட்டால் ஒய்வு கொள்ளல் வேண்டும். வாசித்தல், சித்திரம் வரைதல், கதை கட்டுரை எழுதுதல் அல்லது நண்பர்களுக்குக் கடிதம் எழுதுதல் போன்றவை உங்கள் ஒய்வுக்குரிய செயல்களாக அமைய வேண்டும். கடிதம் எழுதுவதுகூட ஒரு கலையாக உருவாகிவரும் காலம் இது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உடலால் உழைக்காது நீங்கள் மூளையால் உழைப்பவர்களாக இருந்தால், வீட்டுத் தோட்டம் ஒன்றை உங்கள் ஒய்வுக்குரிய பொழுதுபோக்காகக் கொள்ளலாம்; ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு நடந்து சென்று திரும்பலாம். இதற்குக் கடற்கரை போன்ற இடங்கள் உகந்தவையாகும். இளம் வயதினராயின் கைப்பந்தாட்டம், கால்பந்தாட்டம் துடுப்பாட்டம் (Cricket), நீச்சல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டுத் தம் ஒய்வு நேரத்தைக் கழிக்கலாம்.

## உள்ளத்துக்கும் போஷாக்கு

நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு போஷாக்கான உணவு வகைகளை உட்கொள்ளவேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம். ஆனால், உடலைப்போல் எமது உள்ளத்திற்கும் போஷாக்கு அளிக்கும்—உணர்வுகளின் வடிகாலான மாற்றுச் செயலாக்கங்களும் மிகவும் அவசியமானவை என்பதை — எம்மில் பலர் அறிந்திருப்பதில்லை, பாமரமக்கள் மத்தியில் இது ஒரு பெருங் குறைபாடாகவே உள்ளது.

உடலுக்கு உயிர்ச்சத்துக்களும், புரதமும், மாவுசத்தும், கொழுப்பும் எவ்வளவு முக்கியமோ அதுபோல் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய மாற்று வேலைத்திட்டமும், கலைகள் மீதான ஈடுபாடும், விளையாட்டில் நாட்டமும் அவசியமாகும்.

இதுவரை செயல் முறையிலான Active ஒய்வைப்பற்றி ஓரளவு அறிந்துகொண்டோம். அடுத்து, உடலைஎவ்வித செயற்பாடுகளுமின்றி ஒய்வு நிலையில் Passive வைத்துக் கொண்டு களைப்பாறுவது எப்படி என்று பார்ப்போமா?

## ஒய்வு நிலையில் ..

இது, ஓர் இடத்தில் நிலையாக இருந்தவாறு உடலையும் மனதையும் எவ்வித செயற்பாடுமின்றி, சஞ்சலமேதுமின்றி, ஒய்வாக, அமைதியாக வைத்திருக்கும் கலையைக் குறிக்கிறது. நாளாந்தம் ஒரு குறிக்கப்பட்ட நேரத்தை இதற்கென ஒதுக்குங்கள், அது நாளின் ஆரம்பமாகவோ அல்லது முடிவாகவோ இருப்பது அவசியம். இடமும் தனிமையான ஒதுக்குப்புறமாக, பிறரின் குறுக்கீடு இல்லாத இடமாக அமைதல் வேண்டும்.

ஒரு படுக்கையிலோ அல்லது சாய்வு நாற்காலியிலோ உங்களை வசதியாக்கிக் கொள்ளுங்கள். மனதையும் உடலையும் தளர்த்தி அமைதியாக இருங்கள். நீங்கள் நாளாந்தம் சுறுசுறுப்பாக இயங்குபவராக இருந்தால் ஒரு கால்மணி நேரத்திற்கு இது கொஞ்சம் சிரமமாக இருக்கும், ஆயினும் உங்கள் முடிவில் திடமாக இருங்கள். சில சமயங்களில் இது ஒரு நேரவிரயமாகவும் தோன்றக்கூடும். ஆனால், முயற்சியைக் கைவிடா ஒரு வாரம் முயலுங்கள், வாரமுடிவில் உங்களுக்குள்ளே ஏற்படும் மாற்றத்தைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள் அமைதியாக இருக்கவேண்டிய அந்தக் கால எல்லையைநீங்கள் நீடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த அமைதி நிலைக்கு மனதை ஒரு நிலைப்படுத்துவது அவசியமாகிறது. மனதைஎழுந்தமானத்தில் அலையவிடாது, உங்களுக்குப் பிடித்தமான ஒரு கவிதையையோ அல்லது தேவாரத்தையோ அல்லது ஒரு குறளையோ மனதில் திரும்பத் திரும்ப கருத்தூன்றிச் சொல்லுங்கள். அந்த வாசகத்தில் வரும் நிகழ்வுகளை, அரியகருத்துக்களை உங்கள் மனதில் சலனப்படமாக ஓடவிடுங்கள்; மனதால் ரசித்து அனுபவியுங்கள், அவைவைப் பாருங்கள்.

## நம்பிக்கையும் அமைதியும்

அடுத்து வருவது நம்பிக்கை; நம்பிக்கைக்கும் மன அமைதிக்கும் நெருங்கியதொடர்புண்டு. எம் எல்லோரையும் மீறிய ஒரு சக்தி எமக்கு எப்போதும் நன்மை புரிவதற்கென்றேகாத்திருக்கிறது என்று திடமாக நம்புங்கள், நம்பிக்கையே மனிதகுலத்தின் மேம்பாட்டுக்குரிய மூல மந்திரமாகும் ஞானிகளும் யோகிகளும் இத்தகைய ஒரு நிலைப்பட்ட — நம்பிக்கையுடன் கூடிய—ஆழ் மனத் தியானத்தினாலேயே வாழ்க்கையின் பல உண்மைகளைக் கண்டறிந்தனர்; உலகை உய்வித்தனர்.

நீங்கள் இறைவழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவராக இருக்கலாம்; பரவாயில்லை. ஆனால் ஒன்றை, மனதில் இருத்திக்கொள்ளுங்கள், மனிதகுலத்தின் மீது ஏன் இந்த உலகின் மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போகலாம். அச் சமயத்தில் நீங்கள் நம்பிக்கை வைப்பதற்கு ஒரு பொருள் மிக மிக அவசியமாகும். அந்தப் பொருள் இறைவன் என்ற நாமத்துடன் இருந்து விட்டுப் போகட்டுமே!

ஒரு வழிபாட்டுத் தலத்திற்குச் செல்லுங்கள் - அது ஒரு இந்து, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய - எந்த வழிபாட்டுத்தலமாக இருந்தாலும் பாதகமில்லை. இதை ஒருபுதிய அனுபவமாகப் பரீட்சித்துப் பாருங்களேன். எல்லாவற்றுக்கும் மேலான ஒரு சக்தி இருப்பதை நம்புங்கள் அந்தச் சக்தி உங்கள் பிரச்சினைகளின் தீர்வுக்கான செயல்வலிமையை உங்களுக்கு அளிக்கும் என எதிர்பாருங்கள்; அந்த எதிர்பார்ப்பில் நம்பிக்கை வையுங்கள். உங்களுக்கு உதவுவதற்காகவே உங்கள் அருகில் ஒருவர் காத்து நிற்பதாக உணர்வீர்கள். இதனால், உங்கள் மனதிலும் உடலிலும் புதிய துணிவும வலுவும் கிடைப்பதை நீங்கள் அனுபவ ரீதியாக உணர்வீர்கள்.

## வாரத்தில் ஒரு நாள்

இறுதியாக ஒன்று, வாரத்தில் ஒரு நாளை, எவ்வித நாளாந்த கருமத்திலும் ஈடுபடாது, உங்கள் மனத்தினதும் உடலினதும் ஒய்வுக்காக ஒழித்து வையுங்கள், அது ஞாயிற்றுக் கிழமையாக அமையலாம். செய்ய வேண்டிய அலுவலக, வீட்டுக்கருமங்கள் அனைத்தையும் சனிக்கிழமையே செய்து முடித்து விடுங்கள்; எஞ்சியவையைத் திங்கட்கிழமைக்கு ஒதுக்கி வையுங்கள். ஞாயிற்றுக் கிழமை உங்களுக்கென, இனிமையாகப் பொழுதைப் போக்குவதற்கென்றுஏற்பட்ட நாளாகக் கொள்ளுங்கள். வீட்டில் இருந்தவாறே மனதுக்குப் பிடித்த ஒரு படத்தை வீடியோவில் (சினிமா) போட்டுப் பாருங்கள். மூளைக்கு அதிக வேலை கொடாத சுவையான கதை கட்டுரைகளை வாசியுங்கள். மனைவி மக்கள்சூழக்கூடத்தில் அமர்ந்து குலவிக் கும்மாளமிடுங்கள். நண்பர்களுடன் சேர்ந்து கும்மாளம் போடுபவர்களையும், வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம். மாலையில் கடற்கரைக்கு மனைவி, பிள்ளைகளுடன் சென்று கால்கள் மணலில் புதையப் புதைய நடவுங்கள். அவர்களுடன் சேர்ந்து ஐஸ்கிறீம் சாப்பிடுங்கள்; மணலில் அமர்ந்து நிலக்கடலையைக் கொறியுங்கள். மேலே குறிப்பிட்டவைகளைத்

(11ஆம் பக்கம் பார்க்க)

## சிந்தனை மேடை — 3

### சாதி அமைப்பு தகர்ந்து வருகிறதா?

# சாதி அமைப்பு தகர்ந்துவிடவில்லை

□□ அ. கேதீஸ்வரன் □□

**6** சாதி ரீதியாக சமூகத்தினைப் பிரித்து வேறுபடுத்திக் கொள்வதன் மூலம் ஒருவரில் இருந்து ஒருவரை உயர்த்திக்காட்டும் ஒரு பண்பை அடிப்படையாகக் கொண்ட சாதியமைப்பு என்பது, உண்மையில் உலகில் பரந்துபட்டுக் காணப்பட்ட போதிலும், மேலைத்தேய சாதியமைப்பை விடவும் தென்கிழக்காசிய பண்புகளை நாம நோக்குதல் அவசியமாகும். மேலைத்தேயத்தில் 'குடியான்கள்' என்ற வரையறை கொண்டு பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட மனிதனின் வடிவமே, சாதியமைப்பினது தோற்றத்தை உருவாக்கியது. அதேபோலவே தென்கிழக்காசிய நாடுகளிலும் குறிப்பாக இந்தியா, இலங்கையிலும் தொழில் பகுப்பு என்பதே இச் சாதியமைப்பின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்துள்ளது. நிதி ரீதியான

இவ்வாறான அடிப்படையில் உருவாகிய சாதியமைப்பில் படிநிலைத்தரம் என்பது ஏற்படுத்தப் பட்டதிற்குக் காரணம், ஒருவர் ஒருவரோடு இணைந்து கொள்ளாத ஒரு குழப்பமான நிலையைத் தொடர்ந்து பேணுவதன்மூலம் தனது நலன்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதுதான். இதனாலேதான் வெள்ளாளருக்கு அடுத்தநிலை கரையாருக்கும், அடுத்து பிறிதொரு சாதியினருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவ்விரு நிலையினை நாம் கவனத்தில் கொண்டு இன்று எமது பகுதியின் சாதிநிலை பற்றி நோக்குதல், இதன் உண்மை நிலை எது என்பதை அறிந்துகொள்ள உதவமுடியும். அந்தவகையில் வளங் குறைந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் குறைவான சாதிகளாகப் பிரிக்கப்பட்டுக் காணப்படுவதும், நகர்ப்புறம் சார்ந்த மக்கள் உயர்குடியாகக் காணப்படுவதும் விளக்கி நிற்கிறது.

றனர். என்றாலும் தனித்து இவர்கள் தொழிலிலிருந்து வேறுபட்டனரே தவிர, சாதி ரீதியானவகுப்புப்பிரிவிலிருந்து அவர்களைப் பிரித்து நோக்க உயர்வர்க்க சாதியினர் தயாராக இல்லை. இந்நிலை உண்மையில் ஏன் ஏற்பட்டுள்ளது எனின் மக்களை ஏதாவது ரீதியில் அடக்கி வைத்து, தமது நலன்களை மேம்படுத்துவதுடன், சமூக அந்தஸ்து என்பதையும் பெரிதுபடுத்தும் மனோபாவம் உயர் சாதியினரிடம் உள்ளதால், பொருளாதார பலம் பெற்று குடிமைத் தொழிலில் இருந்து விடுபடும் தாழ் குலத்தவரையும் தம்மோடு இணைத்துக் கொள்ளவோ, அல்லது அவர்களை அந்தப் பிரிவிலிருந்து பிரித்து நோக்கவோ அவர்கள் இடமளிப்பதில்லை. அறிவியல் ரீதியில் மனிதனின் மனிதத்தன்மை என்பது மதிக்கப்படாமல் வெறுமனே வரட்டுக் கௌரவம் என்பது மதிக்கப்படும் நிலைதான், இன்று சாதியமைப்பில் பாரிய மாற்

பொருளாதார பலத்தைக் கொண்டவர்கள் தமது கடமைகளில் ஒரு பகுதியினைக் கூலி வழங்கி நிறைவேற்ற முற்பட்டபோது, வாழ்க்கை என்பதனை உறுதிப்படுத்தத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெறாத ஒரு பிரிவினர், கூலிக்கு வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறு இவர்களின் சேவையைத் தொடர்ந்து பெற விரும்பிய பணம் படைத்தவர்கள், தொடர்ந்தும் அவனை வாழ்க்கைத்தரத்தில் குறைந்த நிலையில் வைத்திருக்க முற்பட்டனர். இதற்காக சாதி ரீதியான பாகுபாட்டை ஏற்படுத்தி, வேறு வழியில் அவன் பொருளாதார பலம் பெறுவதைத் தடை செய்தனர். இதன் தொடர்ச்சியான நிலை பல சாதிகளை உருவாக்கியதுடன், இன்றுவரை அவற்றைத் தக்கவைத்துள்ளது.

உதாரணமாக யாழ். நகரப் புறத்திலும் தீவுப்பகுதிகளிலும் வசதிமிக்க துறைமுகப் பகுதிகளிலும் பெருமளவு வெள்ளாளர் காணப்பட, கைதடி, வசாவிளான், காரைநகர் போன்ற பிரதேசங்களில் வளங் குன்றியிருக்கும் பகுதிகளில ஏனைய சாதிகளின் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் சாதிகளின் தோற்றம, பாகுபாடு, எனபன அமைந்த போதிலும அது இன்றுவரை மாறாத நிலைமைபற்றி நோக்கும்போது, பொருளாதார ரீதியில வளமமிக்க நிலை என்பதனை கலவி ரீதியான முன்னேற்றமும் கடற் பொருட்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வி வசதிகளும் ஏற்படுத்தியதால், பல குறைந்த சாதி மக்களின குழந்தைகள் இந்நிலையை விட்டுவிடச் சந்தர்ப்பம் பெற்

றம் ஏற்படாமைக்குக் காரணமாகும். இதனால், அண்மை ஆண்டுகளில ஏற்பட்டு வரும் அரசியல் மாறுதல்கள் என்பதும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பதும், கல்வி ரீதியான முன்னேற்றம் என்பதும், சாதியமைப்பில் இருந்த வேகத் தன்மையையும் நேரடியான ஒடுக்கு முறையையும சற்றுத் தணித்துள்ளதே தவிர, உண்மையில் அடிப்படை மாற்றம் எதனையும் ஏற்படுத்தி விடவில்லை.

அத்தோடு உயர்சாதியினர் என்ற பிரிவில் வந்தவர்களின் வாழ்க்கைத்தரம் எனபது பல வேறு காரணங்களினால் வீழ்ச்சியடைந்து சென்றதுடன், அவர்களின் நிலையையும் சற்றுக் குறைத்து, விட்டதினால் அவர்கள் நேரடியாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும்

பலத்தை இழந்துவிட்டதும் ஒரு காரணமாகும். இதனால் அவர்கள் சாதியமைப்பைக் கைவிட்டனர் எனக் கூறமுடியாது. மாறாக, இக்கட்டான ஒரு சூழ்ச்சியை அடைந்துவிட்டனர் என்பதுதான் உண்மை நிலையாகும்.

அதனைவிட, சாதி குறைந்த பிரிவினர் என்ற வகுப்பில் அடங்கும் பல்வேறு சாதிகளிலும் ஒருவர் ஒருவரை அடக்க முயலுதலே இடம் பெறுகின்றதே தவிர, அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு உயர்சாதியினரை எதிர்க்க வேண்டுமென்றோ, அன்றேல் தமது கல்வி, மற்றும் சமூக உரிமைகளைப் பெறவேண்டும் என்றோ ஒரு பண்பு வளராத நிலை என்பது. இன்றுவரைக்கும் உயர் குடியினர் தமது சாதி நிலையைத் தக்கவைத்துக்கொள்ள உதவுகின்றது. அதனைவிட, சாதியமைப்பில் குறைந்த பிரிவினர் தம்மை விலவித்துக் கொள்ள, உயர் குடியினருடன் ஏற்படுத்தும் திருமண உறவு என்பதனை ஒரு வழியாகக் கொள்கின்றனர். இது உண்மையில் சாதி அமைப்பைத் தகர்க்கவில்லை. மாறாக கட்டி வளர்க்க உதவுகின்றது (உதாரணம்) "படியன் கொஞ்சம் குறைவாம்".

அடுத்து, இந் நிலை தொடர்வதற்குரிய ஒரு காரணமாக, தாழ்த்தப்பட்டவர்கள் என்று வரையறை செய்யப்பட்ட மக்கள் தங்களுக்கென சில வாழ்க்கை முறைகளை ஏற்படுத்தி அதனை மரபுவாதப் பண்பு எனத் தொடர்ந்துகாத்து வருதல், உள்ளது. அதாவது சீவல் தொழிலாளரின் வாழ்க்கை முறை, சில பகுதிகளில் உள்ள பள்ளர், பறையர் சேரிக் குடியிருப்புக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை உண்மையில் அடக்க முற்பட்டவரால்தான் ஏற்படுத்தப்பட்டவையாகும். அதைவிட கூத்து மரபு என்பது தாழ்ந்த சாதி மக்களின் கலை எனக் கருதப்பட்டாலும், இது பெரும் பணச் செலவை ஏற்படுத்தி அவனை மீண்டும், மீண்டும் உயர் சாதியினரிடம் கடன்பெற ஏற்படுத்தப்பட்ட வழிமுறையே தவிர, உண்மையில் இவர்களுக்குச் சொந்தமான கலையெனக் கருதமுடியாது. அதனை விடக் கல்வியில் முன்னேற்றங்களுக்கேற்ப சுகாதாரமான வாழ்க்கைமுறை, அளவான குடும்பத்தொகை என்பனவற்றை நாம் கடைப்பிடிக்க முயல்வதன்மூலம், இந்நிலையை அடியோடு இல்லாது செய்யமுடியலாம். இதனை விடுத்து, இன்று ஏற்பட்டுள்ள தீவிரத்தன்மையின் குறைவு என்பதனை வெறுமனே சாதியமைபபின் தகர்வு என எண்ணிக் கூத்தடிப்போமாயின், இந்த நிலையிலே ஏற்படும் மாற்றங்கள் மீண்டும் சாதி வெறியைத் தட்டியெழுப்பும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் இன்று ஏற்பட்டுள்ள ஓரளவிலான விட்டுக்கொடுப்பைப் பயன்படுத்தி, உண்மையில் மனிதனின் பண்பு தீர்மானிக்கப்படுவது அவனது நடத்தையினால தவிர, பிறப்புக்களின் வரையறையாலல்ல, என்ற உண்மையை நிலைநாட்ட முயற்சிப்பின் சாதித் தகர்ப்பின் காலம் வெகுதூரத்தில் இல்லை எனலாம். □

---

## விளையாட்டுக் களம்

# உலகின் சிறந்த கிரிக்கட் வீரன் (1989 - 1990):

## இம்ரான்கான்

**அ**ண்மையிலே நடந்து முடிந்த உலகத் தொடர் கிண்ணப் போட்டிகள் (World series Cup) பாகிஸ்தானுக்கு எதிர்பாராத தோல்வியைத்தந்திருந்தாலும், அவ்வணியின் தலைவர் இம்ரான்கானுக்கு ஒரு பெருமையைத் தந்துள்ளது.

ஜி. எஸ். சவரிமுத்து

ஆம், 1989 – 90 ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த கிரிக்கட் வீரர் (International Cricketer of the Year) என்ற பட்டம் இம்ரானுக்குக் கிடைத்துள்ளது இதற்காக அவருக்குக் கிடைத்துள்ள 54,000 அமெரிக்க டொலர் பெறுமதியான Rover காரையும், அவுஸ்திரேலியச் சுற்றுப்பயணத்தின் போது மற்றைய பாக். வீரர்களுக்குப் பரிசாகக் கிடைத்துள்ள பணத் தொகையையும் சேர்த்து, பாகிஸ்தானின் லாகூர் நகரில், ஒரு பிரமாண்டமான புற்று நோய் ஆஸ்பத்திரியை அமைக்கத் திட்டமிட்டுள்ளார் இந்த இலட்சிய வீரர். அவுஸ்திரேலிய வீரர் டீன் ஜோணசுக்கே இப்பரிசு கிடைக்கும் எனப்பலரும் எதிர்பார்த்த போதிலும்; இம்ரான் பரிசைத்தட்டிச் சென்று விட்டார்.

இப் பரிசுக்காக இம்ரான் தெரியப்பட்டமை சாலவும் பொருந்தும் என்றே சொல்ல வேண்டும். அண்மைக் காலங்களில் இவர் காட்டி வந்துள்ள தலைமைத்துவத்திறமை, பந்து வீசும் ஆற்றல், மின்னல் துடுப்படி, குழு உணர்வு (Team spirit) ஆகியன பாக். அணியை உலகின் சிறந்த அணியாக்கியுள்ளது. சார்ஜாவில் வெற்றி நேரு கிண்ணத்தில் வெற்றி; இந்தியாவுடனான ஒரு நாள் போட்டிகளில் வெற்றி என்று பாக். அணி பெற்ற வெற்றிக் கோட்டைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தா இந்த 'இம்ரான்' தான்!

37 வயதாகும் இம்ரான் 1971 இல் டெஸ்ட் போட்டிகளை ஆடத்தொடங்கி, இன்று வரை 3000 க்கும் மேலான ஓட்டங்களையும் 350 க்கும் மேலான விக்கட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். பந்து வீச்சாளராகவே இவர் அறிமுகமானாலும், காலம் செல்லச் செல்ல துடுப்பாட்டம், பந்துத் தடுப்பு, அணியின் தலைமைத்துவம் என்று பாக். அணியின் உயிர்நாடியாக விளங்குகிறார். இதைவிட 125க்கும் மேலான ஒருநாள் போட்டிகளில் 2551 ஓட்டங்களையும் 162 விக்கட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்,

இந்திய – பாக். டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் போட்டிகள் என்றால் கிரிக்கட் ரசிகர்களின் பார்வையெல்லாம் அங்குதான் குவிந்து இருக்கும். ஏனெனில் அது போட்டியாக இல்லாமல் போராகவே இருக்கும். இந்தத் தொடர்களில் இம்ரானின் சாதனைகளும் இருக்கத்தான் செய்யும். 1982 இல் 8 விக்கட்டுகளை ஒரே இனிங்சில் கைப்பற்றியமை; 1986 இல் சென்னையில் 135 ஓட்டங்களை விளாசித்தள்ளியமை எல்லாம், இதற்கான சரித்திரச் சான்றுகள். இந்தியாவுடனான டெஸ்ட் தொடர் ஒன்றில், "இந்தியாவிலேயே இந்தியாவை வெல்ல வேண்டும்" என்ற தனது இலட்சியத்தை, 1987 இல் ஒப்பேற்றினர். அதுமட்டுமல்லாது இங்கிலாந்தையும் இதே ஆண்டில் வெற்றிகொண்டார். 1987 இன் இறுதியில் உலகின் சிறந்த பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## கலைச்சாரல்

# மனிதனும் கலைஞனும்

**திசைமுகன்**

“பாயிசம்’ என்ற கவிதை எழுதிய கவிஞரைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்னுடைய எழுத்தாள நண்பர் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். ‘‘அவன் சிறந்த கவிஞன் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ... ’’ என்று எனது எழுத்தாள நண்பன் இழுத்தான். “என்ன ஆனால்?’’

‘‘ஆனால் மனிதன் என்ற ரீதியில் அவன் சுத்த அயோக்கியன். அவனை நான் மதிக்கமாட்டேன். அதனால் அவன் எழுத்துக்களிலும் எனக்கு இப்போ கவர்ச்சியில்லை.’’

‘‘ஏன் அப்படிச் சொல்கிறாய்?

‘‘ஒரு அயோக்கிய அரசியல்வாதி, மக்கள் சேவை, மக்களுக்கான தியாகம் பற்றிக் கதைப்பது போலத்தான் இதுவும். இது அசிங்கமில்லையா? அத்தகைய அரசியல்வாதிகள் கதைக்கும்போது கல்லெறியக் கைகள் துருதுருப்பதுபோலத்தான் இவனது கவிதைகளைப் படிக்கும்போதும் எனக்கு ’’

‘‘உண்மைதான்’’ ஆனால் ஒரு கலைப்படைப்பை ரசிப்பதற்கு அதைப் படைத்தவனின் சொந்த வாழ்க்கையை ஏன் பார்க்கவேண்டும்? இன்று நாங்கள் எத்தனையோ கலைப்படைப்புகளை நாளாந்தம் படிக்கிறோம்; ரசிக்கிறோம். அப்போதெல்லாம் அதைப் படைத்த படைப்பாளியை அதனோடு சம்பந்தப்படுத்தாது, அவனைப் பற்றி பிரக்ஞை இன்றியே படித்துவிட்டோ ரசித்துவிட்டோ போகிறோம், இல்லையா?

‘‘ஆம்’’

‘‘அப்படியானால் ஒரு கலைப் படைப்பை ரசிப்பதற்கு அதைப் படைத்தவனின் சொந்தவாழ்க்கை தடையாய் இருக்கிறது என்று சொல்ல முடியாது. இல்லையா?’’

‘‘உண்மை. ஆனால் இதை எல்லாப் படைப்புகளுக்கும் அழுத்தமுடியாது என்று நினைக்கிறேன்.’’

‘‘அப்படியானால் இதை விளக்குவீர்களா?’’

‘‘அநேகமான சராசரிக் கலைப் படைப்புகளை, அதை எழுதியவன் பற்றி பிரக்ஞை இல்லாமலே சுவைத்துவிட்டுப் போகிறோம் என்பது உண்மைதான். ஆனால் ஒரு வித்தியாசமான, விசேடமான படைப்பைச் சுவைக்கும் போது, இப்படி நாம் அதை எழுதியவனை நினைக்காது விடுபட்டு நிற்பதில்லை. உடனேயே அதை எழுதியவன் பற்றியும் அறிய ஆவல் கொள்கிறோம். அப்படி ஆவல் கொண்டு அவனைப்பற்றி நாம் அறியும்போது, அவனது வாழ்க்கை அவனது உயர்ந்த கலைப்படைப்புக்கு நேர்மாறானதாக, பொய்மை நிறைந்ததாக ஒழுக்கங் கெட்டதாக அமைந்திருக்குமானால் அவனது படைப்பையும் அது பாதிக்கிறது. அந்தப்படைப்பு முன் எம்மிடம் ஏற்படுத்திய பாதிப்பை இழக்கிறது. எம்மை அது முன்னர் கிளர்ந்தெழ வைத்த உச்சத்திலிருந்து ‘எல்லாம் பொய்’’ என்று கீழே தள்ளிவிடுகிறது இல்லையா?

‘‘உண்மை. அப்படியானால் இத்தகைய படைப்பாளியின் கலைத்துவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ’’

‘‘இவரது கலைத்துவம் என்பது, ஒரு கைதேர்ந்த கறுப்புச் சந்தை வியாபாரிக்குக் கைவந்த வியாபாரத் தந்திரம் போன்றது. வியாபாரி தனது தேர்ச்சி பெற்ற வியாபாரத் தந்திரத்தைப் பாவித்து மக்களை ஏமாற்றுகிறான். இந்தப் படைப்பாளி தனது கைவந்த ‘செய்நேர்த்தி’ மூலம் (Craftmanship) கலைத்துவ வேஷம் போட்டு மக்களை ஏமாற்றுகிறான். இவனும் ஓர் வியாபாரி. அதனால் இவர்கள் என்னைப் பொறுத்தவரை அயோக்கியர்களே.’’

‘‘நீங்கள் சொல்வது சரி. ஆனால் ஒரு படைப்பாளியின் படைப்புகளை நாம் ஏன் இப்படிப் பார்க்கக்கூடாது?’’

‘‘எப்படி?’’

‘‘ஒரு எழுத்தாளன் குறைகள் உள்ளவனாக, அயோக்கியனாக இருக்கலாம். ஆனால் அவன் படைப்புகள் அந்த அவனது அயோக்கியத்தனத்திலிருந்து விடுபட அவன் எடுக்கும் எத்தனங்களின் வெளிக்காட்டலாக, நாம் ஏன் கொள்ளக் கூடாது? ’’

‘‘அப்படி எத்தனிப்பவர்கள் தரும் படைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இதற்கும் நான் முந்திக்கூறிய முறையிலேயே பதில் காணலாம். இத்தகைய முயற்சியாளர்களின் வாழ்க்கையை நாம் அறியத் தூண்டப்படுகிறோம்; அவர்களுக்காக அனுதாபப் படுகிறோம். அதேபோல் அவர்கள் படைப்புகளும் எம்மிடம் மேலும் உத்வேகத்தைத் தருகின்றன. இவ்வகையில் ஜோன் ஜெனே (Jean Janet) ஜக்கெறுவாக் (Jack Keruack), அலன் கின்ஸ்பேர்க் (Allen Kingsberg) போன்றவர்கள் உதாரணம். இவர்களது எழுத்தில் ஒளிவு மறைவற்ற உண்மையின் பளிங்கோட்டம் இருப்பதைக் காணலாம்’’

‘‘சரி, அப்படியானால் — அதாவது நீங்கள் கூறுவது போல் எழுதுபவர் எல்லோரும் உண்மை உடையவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருக்கவேண்டும் என்று விதி வைத்தால், இனிமேல் எழுதுவதற்கே யாரும் இருக்கமாட்டார்கள் என்றுதான் நான் சொல்வேன்.’’

‘‘அப்படியானால் எழுதுவது போல் வாழக்கூடாது அல்லது வாழ முடியாது என்கிறீர்களா? ’’

‘‘அப்படி நான் சொல்ல மாட்டேன். ஆனால் ... ’’

உங்கள் தயக்கம் எனக்குப் புரிகிறது. உண்மையில் ஒருவன் வாழ்க்கையில் வாழமுடியாத இலட்சியங்களை எழுத மாட்டான். அது யதார்த்தத்திற்குப் புறம்பானது. ஆகவே வாழக்கூடிய கருத்துக்களைத்தான் முன்வைப்பான். அப்படி முன்வைப்பவன் முதலில் தன்னளவில் அதைக் கடைப்பிடிக்க வேண்டும், இல்லையா? ’’

‘‘முடியாவிட்டால் ... ? ’’

‘‘முடியாவிட்டால் அவன் அது பற்றிய, அப்படி முடியாமல் போவதால் ஏற்படும் தனது மனப்போராட்டங்களை அது பற்றிய மன ஆய்வுகளை, அதனால் சந்திக்கும் பிரச்சினைகளைக் கதையாக, கவிதையாக, நாவலாக வடிக்க வேண்டும். அவனே சமூகப் பிரக்ஞை உடையவனாக, அதன் மனச்சாட்சியாகத் தன்னை முன்னிறுத்துகிறான். அவனது எழுத்துக்கள் அவனைப் பண்படுத்தும் அதேநேரத்தில் மக்களையும் பண்படுத்துகிறது அவன் மனிதனாகவும் கலைஞனாகவும் இயங்கும் தகுதி பெறுகிறான்.

இவர்களது எழுத்துக்களையே உண்மையான ‘‘பரிசோதனை இலக்கியங்கள்’ எனலாம். அல்லது ‘சத்தியசோதனை எழுத்துக்கள்’ என்று கூடச் சொல்லலாம்? ’’

‘‘இவ்வகை எழுத்தாளர்களை முன்கூறிய ஏனைய மூன்று வகை எழுத்தாளர்களில் இருந்து, எவ்வாறு இனம் பிரிப்பீர்கள்? ’’

முதல் வகை எழுத்தாளர்கள் என்பவர்கள் தாம் சொல்வது, எழுதுவது போலவே வாழ்பவர்கள். அத்தகைய எழுத்தாளர்களுக்கு அல்பேர்ட் சுவெட்சர், ரோல்ஸ்ரோய் போன்றவர்களைக் கூறலாம், அடுத்தவகை, தமது உயர்ந்த கலைத் தன்மையை வியாபாரத்துக்காகப்பயன்படுத்தும்போலிகள், அடுத்த வகை ஜோன் ஜெனே போன்ற, பெரும் பெரும் குற்றங்களைச் செய்து சிறைத் தண்டனைக்குள்ளான, எழுத்தாளர்கள். ஆனால் இவர்கள் போலிகள் அல்லர். ஆனால் நான் குறிப்பிடும் எழுத்தாளர்கள் என்பவர் தமது கலைத் திறமையைச் சுயலாபத்துக்காகப் பாவிக்கும் வியாபாரிகளோ, அல்லது பெரும் குற்றங்களைச் செய்து தண்டனைக்குள்ளானவர்களோ அல்லர், சரா

(11ஆம் பக்கம் பார்க்க)

## தூவானம்

### ○ ‘மல்லிகை’ வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா!

மல்லிகை சஞ்சிகை 25 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகிறது. அதன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா, சென்ற 10 ஆம் திகதி, யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. ‘திசை’க்கோ அல்லது ‘நீலாம்பரனு’க்கோ அழைப்பிதழேதும் கிடைக்கவில்லையாயினும், அவ்விழாவிற்குச் சென்றிருந்தேன்.

மல்லிகை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் — கலை இலக்கியம் பற்றிய அதன்கருத்துநிலை, இவற்றை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றுவதில் அது வெற்றியடைந்திருக்கிறதா? இந்த நீண்ட காலப் பரப்பில் தொடர்ந்து வெளிவருவதற்காக அது மேற்கொண்ட விட்டுக்கொடுப்புகள் — சமரசங்கள், எத்தகையன? இவற்றின் பின்னர் விளைந்த சாதனைகள், பயன்கள் என்ன — யாரை அப்பயன்கள் சென்றடைந்தன? இவை போன்றவற்றை ஆராய்ந்து வெளிக்கொண்டுவரும் வகையில், காத்திரமான ஆய்வரங்கொன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான மதிப்பீட்டு முயற்சிகள் அங்கு இடம் பெறாதமை ஏமாற்றத்திற்குரியது.

மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமை வகித்த இவ்விழாவில், சுவாரஸ்யமான கருத்துக்கள் பல வெளிப்பட்டன. மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ‘‘இந்த மலரை வெளியிட்டுவைக்க எனக்குத்தான் தகுதி உண்டு. சஞ்சிகை நடத்தி ஜெயகாந்தன் தோற்றார்; க. நா. சு. தோற்றார்; வல்லிக்கண்ணன், விஜயபாஸ்கரன் ஆகியோரும் தோற்றனர், இவற்றுக்குக் காரணம் என்ன? இவற்றையெல்லாம் நான்யோசித்தேன். சிங்களப் பகுதிகளிலும் வேறு இடங்களிலுமுள்ள சலூன்களின் முகவரிகளைத் திரட்டினேன்; அவற்றுடன் தொடர்பு கொண்டேன். ஜீவா தோல்வியடையவில்லையென்றால், அதற்காக இலங்கையெங்குமுள்ள சலூன்களுக்குத் தலை வணங்குகின்றேன்’’

தெளிவத்தை ஜோசப் :

‘‘ஜீவா சொன்னார், சிறு சஞ்சிகைகள் பல தோற்றுப் போயினவென்று. தோல்விகள் தான் வெற்றியின் அடிப்படை. நின்றுபோய்விட்ட மறுமலர்ச்சி பற்றி இன்றும் பேசப்படுகிறதென்றால், அது தனக்கேயுரிய தனித்துவத்தை வெளிப்படுத்தியிருப்பதால் தான். சரஸ்வதி சஞ்சிகையின் பயன் என்ன என்று அதன் ஆசிரியர் விஜயபாஸ்கரனிடம் ஒருவர் கேட்டபோது, ‘‘ஒரு சுந்தர ராமசாமி’’ என்று அவர் சொன்னார். அதுபோல் மல்லிகையின் பயன் என்ன என்பதை, சபையிலுள்ள உங்களுக்கு விட்டு விடுகிறேன்.’’

திக்குவல்லைக் கமால் :

‘‘மல்லிகை எதனைச் சாதித்தது? தலைவர், விஜயபாஸ்கரனைக் குறிப்பிட்டார். இங்கு நான் அதற்கு உதாரணமாக வந்திருக்கிறேன். வேறுபலரும் உள்ளார்கள்.’’

‘‘இன்றைய நவீன இலக்கிய கர்த்தாக்கள் தம் சமூகக் கடமையில் நின்று வழுவிவிட்டனரா?’ என்ற தலைப்பில் பட்டி மன்றம் இடம்பெற்றது. ஈழத்துச் சிவானந்தன், செங்கை ஆழியான் ஆகியோர் கலந்துகொண்டனர். காத்திரமான கருத்துகளை அவர்கள் முன்வைக்கவில்லை. ஆனால் பட்டி மன்றத் தலைவர் இ. ஜயராஜின் பேச்சு, நன்கு மனதில் பதிந்த பேச்சாகும். நேர்மைத்துணிவுடன், வெளிப்படையானதாகவும் தெளிவானதாகவும் அது அமைந்திருந்தது. இத்தன்மை எமது இலக்கியக் கூட்டங்களில் மிக அரிதாகவே காணக்கிடைக்கும் ஒன்றாகும்.

**நீலாம்பரன்**

இ. ஜெயராஜ் தனது பேச்சில் கூறியதாவது : ‘‘தமக்குப் பிடிக்காதவரின் கூட்டத்துக்குப் போகமாட்டோம் என்று சொல்கின்ற இலக்கிய அறிஞர்கள், இங்கு உருவாகியுள்ளனர்.

நவீன இலக்கியவாதிகள் தாம் சொன்னவற்றை எவ்வளவு தூரம் கடைப்பிடித்தார்கள்? மக்களுக்காக எழுதத் தொடங்கியவர்கள் பின்னர் விமர்சகர்களைத் திருப்திப் படுத்த எழுதத் தொடங்கினார்கள். மனிதத் தன்மைக்காக வந்தவர்கள், தமக்குள் மனிதத் தன்மை அற்றவர்களாக இருக்கிறார்கள்.

சாதாரண மனிதனைவிட மேலதிகமாக சமூகத்தைப் பார்க்கின்றவனே, எழுத்தாளனாவான். ஆனால் அப்படி இல்லாதவர்களைக் காண்கிறோம். ஆகையால் எழுத்தாளர் யாரென்று பார்க்க வேண்டும். பிரச்சினையைத் தீர்க்கும் மனோபலத்தை எழுத்தாளர் ஊட்டவேண்டும். சாதிக் கொடுமையையிட்டு சாதி உணர்வுடையவன் வெட்கப் படக் கூடிய முறையில், திருந்தக்கூடிய முறையில், எத்தனை படைப்புகள் தோன்றியிருக்கின்றன? உங்களால் பதில் சொல்ல முடியாது. டானியலின் எழுத்துக்களில், குறிப்பிட்ட சமூகப் பிரிவுகள் கிண்டல் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தான் ஒன்றை விதையிலேயே நசிக்கப் பார்ப்பான்; மீறி வளர்ந்தால் அங்கீகரிப்பான் – போராட்டத்தை அல்ல ; போராளிகளை!

சாதியை ஒழிக்கவந்த எழுத்தாளர்கள், சாதியைப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் மண்ணில் தோன்றிய பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க எத்தனை பேரை உருவாக்கியிருக்கிறது? ’’ □

# இலங்கையில் பேச்சுவார்த்தைகளின் நடைமுறை: 1983 - 86

சென்றவாரத் தொடர்ச்சி

1 மடிகே பன்ஞசிக மஹா தேரோ

மாண்புமிகு ஜனதிபதி திரு ஜே.ஆர். ஜெயவர்த்தனவிற்கு கௌரவ பிரதம மந்திரி அவர்கட்கும், நாடாளுமன்றமந்திரி சபை அங்கத்தவர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, மகரகம: சிறீ வஜிரஞான தரமயத்ரநாய 83-00,00, 4 ப, ஆசிரியர், இலங்கையில் இனக் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கும், அரச காணிகளில் சட்டவிரோத குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கும், இன்றைய ஈழப்பிரச்சினைக்கும் தமிழர்களைக் குற்றம் சாட்டுகின்றார். வவுனியாவிற்கும் ஆனையிறவிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் குடியேற்றம் தொடர்பாக, ஏற்கனவே அங்கிருக்கும் இந்தியத் தமிழருடன் சிங்கள மக்களும் குடியமர்த்தப்பட வேண்டும்என்ற ஆலோசனையினை முன்வைக்கின்றார்.

2 இலங்கை முறிப்: இந்தியாவினுடைய நேர்மையானபங்கு. லண்டன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, இங்கிலாந்துக்கிளை, 83-00-00-6 ப ''இந்து பத்திரிகை''யிலிருந்து மறுபிரசுரம். இந் நீண்ட பேட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் அமிர்தலிங்கம், இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகளை ஆராய்வதோடு, இலப்பிரச்சினைக்கான மூலம் யாது என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றார். அவர் இந்தியாவின் பங்கினை ஒரு நடுவர் நிலையில் பார்ப்பதோடு, இந்தியா தீர்விற்கான செயற்பாட்டினையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வாதிடுகின்றார்.

3 திருச்செல்வம், நீலன்— மாவட்ட சுயமுகாமையும்— தேசிய ஒற்றுமையும் தொடர்பான ஒரு குறிப்பு –

கொழும்பு திருச்செல்வம், நீலன், 83-00-00 ப. 8. இனப் போராட்டம் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகட்கு தீர்வானது, தேசிய ஒற்றுமை, இணக்கம், இனப்பாரபட்சமின்மை என்பவற்றின் ஆழமான பார்வைக்குள் பெறப்பட்டதாக அமைதல், வேண்டும். இவர் மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு மாற்றீடாக மாவட்ட சுயமுகாமை முறையினை முன்வைப்பதோடுதேசிய ஒற்றுமை, இன உரிமைகள் கடப்பாடுகளுக் ான ஒரு பட்டயத்தின் உருவாக்கம் பற்றியும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

4 ஐக்கிய இராச்சியம் - ஆய்வுக் குழு, தமிழ் பிரிவினைவாத பயங்கரவாதம்: பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காக உபாயங்கள்: லண்டன் ஐ.இரா. ஆய்வுக் குழு 83-00-00 ப. 6.

ஆவணங்கள், இனப் போராட்டத்திற்கு தீர்வுகாண ஆலோசனைகளை முன்வைக்கிறது. தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்கிற்கு ஓர் திறமையான பூரண கடற்தடையினை ஏற்படுத்துவது, நடந்து கொண்டிருக்கும் போரினைகட்டுப்படுத்துவதற்கு பிரதானமாக அமையும் எனக் கூறப்படுகின்றது. வடக்கு – கிழக்கு மாகாணங்கள் ஒரு போதும் இணைக்கப்படலாகாது. இலங்கையின் மாகாண பிரிவுகளை நீக்கி சிறிய மாவட்டங்களை உருவாக்குமாறு கூறப்பட்டுள்ளது. இதில் இரண்டு படங்கள் தற்போதைய, எடுத்துக் கூறப்பட்ட எல்லைகள் பற்றியதாக அமைந்துள்ளது.

5 தேசிய ஒற்றுமைக்கான ஒரு சர்வகட்சி கமிட்டி:

''தேசிய அரசுக்கு'' ஒரு முன்னேடி. தமிழ் டைம்ஸ்83.01.00 V.2 (3) - 2 - ப, 1 - 16 வகுப்புவாத இணக்கம், தேசிய ஒற்றுமை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு வழிவகைகளைத் தேடும் முகமாக அரச நாடாளுமன்றக் குழு. ஓர் சர்வகட்சி நாடாளுமன்ற கமிட்டியினை அமைப்பதென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இப் புதிய திட்டத்தினை தமிழர் விடுதலைக் கூட்டணி சாதகமாக தான் ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனைய எதிர்க்கட்சிகள் யாவும் இதனை எதிர்பார்ப்பதாக அமைந்தது. அதே நேரம் பிரிவினையினைத் தூண்டும் சகல அரசியல் கட்சிகள் குழுக்கள் யாவற்றினையும் தடைசெய்யும் திட்டம் கைவிடப்பட்டது.

6 நவரட்ணம் – வீ இங்ஙனேர் முயற்சியை தமிழர் தாங்கிக் கொள்ள முடியுமா? ''தேசிய அரசாங்கம்.''

தமிழ் டைம்ஸ் – 83.03.00 V. 2 (5)3 – ப – 6 – 18. இக் கட்டுரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால்எழுதப்பட்டது. தமிழரது உரிமைகள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், தமிழரது அபிலாசைகளை, திருப்திப்படுத்துவதாகவும் அமையவேண்டும். ஆசிரியர், சர்வகட்சி நாடாளுமன்றக் கமிட்டி தமிழர் வேண்டியதை அளிக்கும் என்பதில் தனது ஐமிச்சத்தை தெரிவிக்கின்றார்.

7 வடக்கில் இராணுவத்தினைக் கட்டி எழுப்பல்:

இராணுவ நிர்வாகத்திற்காக ஒரு முன்னுரை — தமிழ் ரைம்ஸ் 83 · 05 - 00 V2 (7) -ப 2; 1—17 இலங்கையின் வடக்கில் தமிழர் நகரமான யாழ்ப்பாணத்தில் பாரிய அளவில் இராணுவத்தினைக் கட்டி எழுப்புதல், சிவில் நிர்வாகம் ஓர் இராணுவக் கட்டுப்பாட்டிலமைந்த நிர்வாகமாக மாற்றியமைக்கப்படும் என்ற பலமான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் மிதவாத தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் கலந்துரையாடி அவர்களது கைகளைப் பலப்படுத்த வேண்டும். இதைச் செய்யாது பின்போட்டால் வடக்கு கிழக்கில் பெருமளவு ஆதரவினை இழக்க வேண்டியதாக இருக்கும் என இங்கு வாதிடப்படுகின்றது.

8 சமய சமூக நடுநிலையம்

வகுப்புவாத இணக்கத்தை நோக்கி, அரசியல் தீர்வுக்கான நிகழ்வுகள் தீர்மானங்கள் பற்றிய ஓர் ஆய்வு. புதிய பதிப்பு கொழும்பு: சமய சமூக நடுநிலையம், 83 06.00-57. P இலக்கு எண் 74.

இவ்வறிக்கையின் நோக்கம், இனப் போராட்டத்திற்காக உளவியல், கலாசார அரசியல் காரணங்களையும் தாக்கங்களையும் பற்றிய ஒரு ஆழமான விளக்கத்தை அளிப்பதாகும். முதலில் இலங்கைசிங்கள, தமிழ் தேசியவாத பிரச்சினைகளுடன் கூடிய பல இன மக்கள் வாழும் நாடு என்ற விளக்கத்தினைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக, அண்மைக்கால அபிவிருத்திகள்பற்றி கவனம்கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது1977 ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடிக்கப்படும் சாதகமான அணுகுமுறைகள், இளைஞர் பயங்கரவாத எழுச்சி, பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்றன, பிரதான பகுதி அரசியல் பேச்சுவார்த்தையின் தேவையினைத் தொட்டுச் செல்கிறது. பல அம்சங்களுக்கு இங்கு கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியல் (அபிவிருத்திச் சபைகள் இராணுவம், இளைஞரும் பயங்கரவாதமும், சர்வகட்சி மாநாடு) பொருளாதார, கல்வி, வெகுஜன தொடர்பு (சமய, அரசுசார்பற்றநிறுவனங்களின் பங்கு உட்பட) போன்றன. இறுதியாக பொதுமக்களை பிரதானமாகக் கொண்டு சிபார்சுகள் அளிக்கப்பட்டுள்ளன.

9 மாண்புமிகு நரசிம்மராவ்,

இந்திய வெளி நாட்டமைச்சரின இலங்கை விஜயம். 29 ஜூலை 1983 கொழும்பு, இலங்கைஅரசாங்கம 83 07.00 1 ப. பத்திரிகைச் செய்தி— இலங்கைக்கு இந்திய வெளியுறவு அமைச்சரின் வருகை.- இரு வெளிநாட்டமைச்சர்களும், இறுதியில் தத்தம் நாட்டின் மரபுவழி வந்த நட்பினை இறுக்கமாகப் பேணுவதாக உறுதிப்படுத்தினர்.

10 ஜனதிபதி செயலகம்:

திரு. பார்த்தசாரதி, ஜனதிபதி ஜயவர்த்தன இருவருக்கும் இடையில் நடந்த சந்திப்புத் தொடர்பான பத்திரிகைச் செய்தி, (கொடுக்கப்பட்ட தலைப்பு) கொழும்பு இலங்கை அரசு. 83 08.00.-ப.1 இப் பத்திரிகைச் செய்தியில் ஜனதிபதி ஜயவர்த்தன இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபை திட்டத்தினைச்செயற்படுத்துவதே வழியாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

11 தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஜனதிபதிக்குக் கடிதம். நம்பிக்கைத்துரோகம், வஞ்சனை நிறைந்த கீழ்த்தரமான செயல் யாழ்ப்பாணம். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, 83.08.10.17. ப. இக் கடிதத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழர்கோரிக்கைகள். தொடர்பாக அரசு அதன் தீர்மானங்களை என்றும் செயற்படுத்தியதில்லை என வாதிடுகின்றது. இக்கடிதத்தில் த ஐ வி. முன்னணியினரின் பிரதான கோரிக்கையாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் கட்டுப்பாடு குறிக்கப்பட்டுள்ளது.

12 எமது ஐக்கியத்திற்காக இந்தியா, கொழும்பு, இலங்கை அரசு, 8 08.14 ப.2 சண்டே ஒப்சேவர் —மறு பிரசுரம். இக் கட்டுரை, எச்-டபிள்யூ ஜயவர்த்தன இந்தியாவில் பேச்சு நடத்திய பின் இலங்கைக்குத் திரும்பியபோது கொடுக்கப்பட்ட செய்தி பற்றி குறிப்பிடுகின்றது. அவரது பிரதான செய்தி, இந்தியா, இலங்கையின் ஒற்றுமை, சுதந்திரம், ஐக்கியம் என்பவற்றிற்காகவே நிற்கிறது என்பதாகும்.

13 அமிர்தலிங்கம் டெல்லிக்குப் பறக்கின்றார் லங்கா காடியன். 83.08 15 Vo(7-8) ப – 18 ஆகஸ்ட் 15-ம திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையிலிருந்து மறு பிரசுரம். இக் கட்டுரை அமிர்தலிங்கத்தின் டெல்லி பிரயாணம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இப்பிரயாணத்தின் பின் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில்லை என்ற தீர்மானத்தில் த ஐ வி. முன்னணி மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிடுகின்றார் எச்.டபிள்யூ ஜயவர்த்தன, தமது அரசாங்கம் புதிய திட்டங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு விரும்புவதாக இந்தியப் பிரதமர் காந்தியிடம் குறிப்பிட்டுள்ளார்.

14 இலங்கையின் ஐக்கியத்திற்காக இந்தியா – இந்தோ — சிறீலங்கா. லங்கா காடியன் 83.08 15 V 6 (7&8). 2 ப - 17 - 18. 1983 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய சண்டே ஒப்சேவரிலிருந்து மறுபிரசுரம். இக் கட்டுரையில் அரசு பிரதிநிதியான எச். டபிள்யூ ஜயவர்த்தன நியூடெல்கி பிரயாணத்தின் பின் விடுக்கப்பட்ட செய்தி விபரங்களைக் குறிப்பிடுகிறது. இந்தியா, இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாட்டிற்காக நிற்கிறது என அவர் குறிப்பிட்டார். ஜனதிபதி ஜயவர்த்தன மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டத்தினையும் செயற்படுத்த விரும்புவதோடு வேறு பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளார். எப்படியும் திட்டங்கள் தமிழரது அபிலாசைகளைத் திருப்திப்படுத்துவதாக அமையவில்லை என்பதனை திருமதி காந்தி சுட்டிக் காட்டியுள்ளார். ஜனதிபதி ஜயவர்த்தன இப்புதிய திட்டங்கள் தொடர்பாக மேலும் கலந்து ஆலோசிப்பதற்குத் தயாராக உளளதனையும் பிரதமர் இந்திரா காந்தி அதற்கு தனது நல் ஆதரவினை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 இந்திரா லோக்சபைக்கு சுருக்கமாக விளக்குதல் – இந்தோ – இலங்கை – லங்கா காடியன் – 83.08 15 V 6 (7&8) ப – 11 1983 ஒகஸ்ட் 13 ம் திகதிய ஐலண்ட் பத்திரிகையிலிருந்து மறுபிரசுரம். இலங்கையின் பிரதிநிதியாக சென்றுள்ள கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்த்தனவுடனான சந்திப்பின்பின், இலங்கை நிலைமை பற்றி இந்திய நாடாளுமன்றத்திற்கு இந்திரா காந்தி தெரிவித்தல். அவற்றின்படி, இலங்கையின் பிரச்சினைக்கான தீர்வு ஐக்கியம் ஒற்றுமையின் அடிப்படையில் தமிழ் மக்களது அபிலாசைகள் தகுந்த சலுகைகள் அளித்தல் மூலமே ஏற்படலாம் என்றார்.

16 த. ஐ. வி. மு. மீண்டும் சதுரம் ஒன்றிற்கு – லங்கா காடியன்: 83.08.15 V 6 (7&8) ப. 3, இக்கட்டுரை த. ஐ. வி. முன்னணியினர் இந்தியாவினை இப்பிரச்சினைக்குள் ஓர் செயற்திறன்மிக்க நடுவராகக் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதன் மூலம் பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றினைப் பெறுவதற்கான உபாயங்களைச் சுருக்கமாக விளக்குகின்றது. ஜனதிபதி ஜயவர்த்தன இந்தியாவினை ஓர் கௌரவ தரகருக்கு மேலான நிலையில் பார்ப்பதனை எதிர்க்கின்றார்.

(வளரும்)

## வோஷிங்ரன் நகர மேயர் கைது! இவர் ஓர் போதைவஸ்து வியாபாரி

அமெரிக்க உள்நாட்டு அரசியலில் மிகப் பிரபலம் வாய்ந்தவராகவும், மனித உரிமைகளுக்கான போராட்டக்காரராகவும் பேர்பெற்றிருந்த வோஷிங்ரன் நகரமேயர் மேரியன் பரி என்பவர் அண்மையில் வோஷிங்ரன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இவர் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார் என முன்னர் பல கதைகள் பரப்பப்பட்டிருந்ததாலும் அவை நிரூபிக்கப்படாதவையாகவே இருந்தன, ஆனல் தற்போது இவரைக் கைது செய்த பொலிஸார், இவர் மேற்படி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போதையும் மெய்யுமாகப் பிடிபட்டார் எனச் சொல்கின்றனர். இவர் நீக்ரோ சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வோஷிங்ரன் நகரில் இடம் பெற்ற அளவுக்கு மீறிய கொலை, களவு போன்ற குற்றங்களுக்கு போதைவஸ்து வியாபாரமே காரணம்எனவும் சொல்லப்படுகிறது.

# தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களின் குறிப்பேடு

## 1-1-1985

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| மட்டக்களப்பு | இறப்பு | பாதுகாப்புப் படையினரால் கல்முனையில் 10 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். |
| மட்டக்களப்பு | கைது | சென். மைக்கேல் கல்லூரி மாணவன் ஆர். சுதாகரும், அரும்கதான் குடியைப் சேர்ந்த தெட்சணமூர்த்தி என்பவரும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். |
| கொழும்பு | அறிக்கை | பெருந்தொகையான உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டிருப்பதற்கான ஆழமான திட்டம் அரசாங்கத்திடம் இருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினர். சர்வகட்சி மகாநாட்டின் ஆலோசனைகளை அரசாங்கம் வீசிவிட்டமையைக் குற்றஞ்சாட்டிய அவர், அரசாங்கம் தனது குற்றங்களை மறைப்பதற்கு சர்வகட்சி மகாநாட்டை கேடயமாகப் பாவித்தது என்றும் குறிப்பிட்டார். |
| யாழ்ப்பாணம் | தேடுதல் | கொடிகாமத்தில் வீட்டிற்கு வீடு தீவிர தேடுதல் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. |
| யாழ்ப்பாணம் | சேதம் | சாவகச்சேரி நீதிமன்றக் கட்டிடம் இனந்தெரியாதவர்களால் சேதப்படுத்தப்பட்டு, கோவைகளும் எடுத்துச்செல்லப்பட்டன. |
| யாழ்ப்பாணம் | சேதம் | மிருசுவிலுக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் 35 அடி நீளமுள்ள பாலம் குண்டுகளினுல் தகர்க்கப்பட்டதனுல் புகையிரத சேவை வவுனியாவரை மட்டுமே நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்தது. |
| யாழ்ப்பாணம் | கைது | பாதுகாப்புப்படையினர் திக்கம், அல்வாய், நாவலடி, சக்கோட்டை ஆகிய இடங்களில் 200 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் 15 வயதிற்குட்டவராவர். |
| யாழ்ப்பாணம் | சேதம் | காரைநகர் கடற்கரையோரம் ஸ்ரீ லங்கா கடற்படையின் 'செல்' தாக்குதலுக்குள்ளானது. |
| யாழ்ப்பாணம் | திருட்டு | இரு படை வீரர்கள் பருத்தித்துறை, புலோலி மேற்கிலுள்ள ஒரு வீட்டில் திருட முயற்சித்தனர். ஆனுல் கூக்குரலெழுப்பியதும் ஓடிவிட்டார்கள். |
| கிளிநொச்சி | தாக்குதல் | சாரம் அணிந்த ஒரு குழுவினர் கிளிநொச்சியிலுள்ள தமிழ்ப் பொதுமக்களைத் தாக்கினர்கள். |
| மன்னர் | சேதம் | ஊரடங்குச் சட்ட வேளையில் இனந்தெரியாதோர் ஒரு வீட்டையும், மன்னர் சந்தியிலுள்ள கிராம சேவகர் அலுவலகத்தையும் எரித்தனர். |
| முல்லைத்தீவு | அகதிகள் | பாதுகாப்புப் படையினரின் அட்டூழியங்களின் விளைவாக முல்லைத்தீவில் 12,000 தமிழர் அகதிகளாக்கப்பட்டனர் என மதிப்பிடப்பட்டது. அவர்களுள் குறைந்தது 1000 பேருக்காவது முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. |
| முல்லைத்தீவு | திருட்டு | அகதி முகாம்களிலிருந்து சில விவசாயிகள் தமது வீடுகளுக்குத் திரும்பியபோது அவை கொள்ளையடிக்கப்பட்டிருப்பதை அறிந்தார்கள். |

## 2-1-1985

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| மட்டக்களப்பு | கைது | கல்முனையைச் சேர்ந்த செல்லையா சண்முகராசா (வயது 24) பொலீஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார். சத்துருகொண்டானில் ஹொட்டல் தொழிலாளியான இளையதம்பி அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டார். |
| மட்டக்களப்பு | தேடுதல், கைது | மொறக்கொட்டாஞ்சேனையில் பொலிசும், பொலிஸ் அதிரடிப்படையினரும் தேடுதல் வேட்டையை மேற்கொண்டு 51 தமிழர்களைக் கைது செய்தனர். |
| மட்டக்களப்பு | காயம் | ஏருவூர், தென்னமுனையில் இரு தமிழரைப் பொலிசார் சுட்டுக்காயப்படுத்தினர். அவர்கள் இருவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். |
| கொழும்பு | ஏனையவை | தமிழரின் அவலம் பற்றி விளக்கும் பொருட்டு பேராசிரியர் சிவத்தம்பியின் தலைமையிலான யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவின் தூதுக்குழு, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்களைச் சந்தித்தது. |
| கொழும்பு | அறிக்கை | இலங்கைக்கு அழைக்கப்பட்ட எல்லா இஸ்ரேலியர்களும் தமது பணியை முடித்துக்கொண்டு நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஓர் அறிக்கை மூலம் அறிவித்தார். |
| யாழ்ப்பாணம் | தேடுதல் | பாதுகாப்புப் படையினர் ஆனைக்கோட்டையில் வீட்டிற்கு வீடு தீவிர தேடுதலை மேற்கொண்டனர். |
| யாழ்ப்பாணம் | ஆட்சேபம் | மைலிட்டி. ஊரணி, பலாலி ஆகிய பகுதிகளிலிருந்து மீனவ குடும்பத்தைச்சேர்ந்த 1000 பேர் வரையிலான ஆண்களும், பெண்களும் கடலில் தொடர்ந்து மீன் பிடிக்க அனுமதி தமக்கு அளிக்கப்படவேண்டும் என்று கோரி மைலிட்டி இறங்கு துறையின் முன்பாகத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். |
| யாழ்ப்பாணம் | சேதம், கைது | பலாலி வீதியிலுள்ள திருநெல்வேலிச் சந்தியில் பாதுகாப்புப்படையினர் ஒரு மோட்டார் வண்டியைச் சேதப்படுத்தியதோடு, வேறொரு மோட்டார் வண்டியையும் அதன் சாரதியையும் கொண்டுசென்றனர். |
| யாழ்ப்பாணம் | ஏனைய | தமிழ்த் தீவிரவாதிகளால் உபயோகிக்கப்பட்டுவரும் ஆயுதங்கள் பற்றிய தகவல் கொடுப்போர்க்கு சிறந்த வெகுமதி வழங்கப்படும் என்பதை அறிவிக்கும் துண்டுப் பிரசுரங்கள் யாழ் நகரில் இராணுவ ஹெலிக்கோப்ரர்களிலிருந்து போடப்பட்டன. |
| யாழ்ப்பாணம் | திருட்டு | சாவகச்சேரி, கொடிகாமம் மீசாலை ஆகிய இடங்களிலுள்ள தபால் அலுவலகங்கள் இனந்தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டன. |
| யாழ்ப்பாணம் | சேதம் | ஒரு விவசாயிக்குச் சொந்தமான உழவு இயந்திரம், புன்னாலைக்கட்டுவனில் இராணுவத்தால் எரிக்கப்பட்டது. |
| முல்லைத்தீவு | கைது | 14 வயதுடைய ஜெனித்தா சின்னப்புவும், அவரது தாயார் அக்னெஸ் சின்னப்புவும் புதுக்குடியிருப்பில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, ஹெலிக்கோப்ரர்மூலம் வவுனியா இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். |

( 6 6 (

## நெருப்பும் மரணமும்

— ஷன்டாரோ தனிக்காவா
(ஜப்பான்)

எனக்குப் பதிலாக சாவதற்கு ஒருவருமில்லை
ஆகவே நானே சாகவேண்டும்
வேறு எவரின் எலும்புகளுமில்லை
நான் என்னுடையதேயான எலும்புகளாய் ஆவேன்
சோகம்
நதியின் வழிந்தோட்டம்
மனிதர்களின் வம்பளப்பு
காலைப்பனியில் நனைந்திருக்கும் ஒரு சிலந்திவலை
இதில் எது ஒன்றையும்
என்னுடன் நான் எடுத்துச்செல்ல முடியாது
வேண்டுமானால் நான் விரும்பும் ஒருபாடல்
எனக்கு அளிக்கப்படும் கேட்கப்படும் பொருட்டு
எனது எனது எலும்புக் காதுகளால்

— ஆங்கிலம் வழி தமிழில்: பிரம்மராஜன் □

## பயணம்

ஓட்டுகிறேன் ;
நானும் ஒரு ரயிலை

சரியான
இடத்திலிருந்து தான்
ஓட்ட ஆரம்பித்திருக்கிறேன்.

இனி,
எங்கே போவது?
எப்படிப் போவது?

இதென்ன இது?

ரயில் பெட்டி முழுக்க
பச்சை பச்சையாய் நெருப்பு,

மின்கம்பங்க ளெல்லாம்
முண்டமாய்க் காணுது...

பசுமை யெல்லாம்
கருகி யிருக்குது...

தண்டவாளத்தில்
இத்தனை மனிதத் தலைகளா?

ஓ ஓட்டுகிறேன்...
நானும் ஒரு ரயிலை.

சரியான
இடத்தி லிருந்து
ஓட்ட ஆரம்பித்திருப்பதால் —

எங்கே போவது
எப்படிப் போவது
என்று தெரியாவிட்டாலும் —

ஓட்டத் தானே வேண்டும்;
இந்த வாழ்க்கை ரயிலை
மோக்ஷத்தைத் தேடி...

— ஈழக்கவி □

## எனது பனிக்காலங்கள்

திருவெம்பாவைப் பூஜையும்
பள்ளியெழுச்சிப் பஜனையுமாக
சூழலோடு ஒன்றிய
சுகமான பனிக்காலங்கள்
எழுபதுகளில் எனக்கிருந்தது.

பின்வந்த எண்பதுகளில்
என் பனிக்காலங்சள்
காட்டிலும் (கடற்) கரையிலும்
காவலும் கடமையுமாய்க்
கழிந்தன.

தொண்ணூறுகளின்
தொடக்கத்திலோ
என்னரும் தேசத்தின்
இனிய பனிக்காலங்களை
எண்ணிக் கலங்கிய வண்ணமாய்
'ஒஸ்லோ'வின்
நீண்ட தெருக்களில்...

— பங்கஜன் □

# இரு பாடசாலை நாடகங்கள்

## — சில அவதானிப்புகள்

□□ எம். கே. முருகானந்தன் □□

இன்றைய எமது நாடகங்கள் பற்றிய சில சுவாரஸ்யமான கருத்து மோதல்கள் திசையில் வெளிவந்து கொண்டிருக்கும் இத் தருணத்தில் பாடசாலை நாடகங்கள் இரண்டினைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது.

ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி அக் கல்லூரியில் நடந்த கலை கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாகவே இந் நாடகங்கள் அரங்கேற்றப் பட்டன.

முதலாவது, சிறுவர் நாடகம் ஆச்சி சுட்ட வடை. குழந்தை சண்முகலிங்கத்தின் மூலப்பிரதியை அடிப்படையாகக்கொண்டது. மற்றது – The Last warning என்னும் ஆங்கில நாடகம். இதனை அக் கல்லூரியின் ஆசிரியர்களில் ஒருவரான எஸ். சுந்தரமூர்த்தி அவர்கள் எழுதியிருந்தார்கள்,

“நாடகம் என்றதும் மேடை உடை ஒப்பனை பின்னணி இசை, பார்வையாளர்கள் பாராட்டுகள் என்றிருக்கும் எண்ணக் கருக்களை, நாடகங்களை பாடசாலையில் படிப்பித்தல் உபகரணமாகப் பாவிக்க நினைக்கும் ஆசிரியர்கள் முதலிற்கைவிட்டு விட வேண்டும்” … என்று கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் சிறுவர் நாடகங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இதனை நெறியாளர் உணர்ந்து செயற்பட்டிருக்கிறார் என்பதை பல இடங்களில் காணக்கூடியதாக இருந்தது.

“சிறுவர் நாடகம் சிறுவர்களுக்கேஉரியது. அதன் பார்வையாளர்கள் சிறுவர்கள்தான். சிறுவர்கள் அதை எவ்வாறு உள்வாங்குகிறார்கள், அவர்களின் கலையுணர்வு வளர்ச்சிக்கு அது எவ்வாறு உதவுகிறது என்பதுதான் முக்கியம்” என்ற எம். ஏ. நுஃமானின் கருத்து. நாடகங்களை புதிய உணர்வுடன் பார்க்க எனக்கு உதவியது,

சிறுவர் நாடகத்தில் 7 ஆம் வகுப்பைச் சேர்ந்த 21 மாணவர்கள் பங்குபற்றினார்கள். நாடகம் ஆரம்பிக்கும் போதும் பின்னரும் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரையும் அரங்கில் இருந்த அனைவர்க்கும் எக்கோணத்தில் இருந்து பார்த்தாலும் தெரியுமாறு ஒழுங்கமைத்திருந்தமை பாராட்டுக்குரியது. இதன் காரணமாகச் சிறிய பாத்திரங்கள் கூட ஒதுக்கப்படாது கவனத்தில் எடுக்கப்பட்டார்கள். இத்தகைய கவனிப்புகள் மாணவர்களின் சுயகௌரவத்தைவளர்க்கவும், கூட்டு உணர்வை வளர்க்கவும் உதவும்.

அதிக எண்ணிக்கையான சிறுவர்களை ஒருங்குசேர மேடையேற்றினாலும், அவர்கள் ஒருமித்த உணர்வுடன் நடித்தும், பாடியும், விளையாடியும் திறமையைக் காட்டினார்கள்.

ஆடலுக்கும், பாடலுக்கும், விநோத நிகழ்ச்சிகளுக்கும் நிறைய வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்ததினால், சிறுவர்கள் உற்சாகத்துடனும், இயற்கையாகவும் நடித்தார்கள்.

பெரும்பாலான சிறுவர் நாடகங்களில், சிறுவர்கள் தாம் சரியாகச் செய்து ஆசிரியரைத் திருப்திப்படுத்தி விட்டோமோ என அறிய, அல்லது ஆசிரியரின் கட்டளையை எதிர்பார்த்து மேடையின் பக்கத்தை அடிக்கடி திரும்பிப் பார்ப்பதை அவதானிக்க முடியும், ஆனால் இங்கு நெறியாளரின் நேரடித் தலையீடு இன்றி,மாணவர்கள் தமது திறமைக்கும் இயல்பிற்கும் ஏற்ப நடித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு தருணத்தில், முன்னே வந்து கதை சொல்லும் மாணவனின் 'டை' கழன்றுவிட்டது. அவன் அதற்காகத் திடுக்கிட்டுத் தடுமாறி நிற்கவில்லை. மாறாக அவிழ்ந்த டையை, சாவதானமாகச்சால்வையைப் பிடிப்பதுபோல் இரு கைகளாலும் இழுத்துப் பிடித்துக் கொண்டே நடித்ததை மெச்சாமல் இருக்கமுடியாது.

நரியாக நடித்த மாணவனது நடிப்பும், நடையும் அபாரம் காகம் பரிதாபப்பட்டுக் கொடுத்த பாதி வடையை ரசித்து உண்ணும் போது, மாணவர்கள் அதில் பங்குகேட்பார்கள். நரி மறுமொழி ஏதும் சொல்லாது, முகபாவனையால் மாத்திரம் அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னே செல்லும் போது, பண்பட்ட நடிகர்களையே பின்னுக்குத் தள்ளிவிடும் திறமையைக் காண்கிறோம்.

காகமாக நடித்தவரும் நன்றாகவே செய்திருந்தார். சோடா குடிப்பதைப் போத்தல் இல்லாமலே பாவனை செய்தல், தடி இல்லாமலே ஆச்சி ஊன்றுகோலுடன் நடப்பதுபோல் நடித்தல், நரிக்கு வழிந்த வீணீரை அண்டாவில் ஏந்தித் தூக்கி வீசுதல், போல பாவனை செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் ஊமம் என்று சொல்லப்படுகின்ற பேசாப்பாவனைத் திறனை நன்கு வெளிப்படுத்தினார்கள்.

ஆயினும் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த சில மாணவர்கள் தமது பாத்திரத்தை மறந்து, பார்வையாளர்கள் போல் ஏனைய நடிகர்களைப் பார்த்து ரசித்ததையும், அரங்கில் இருந்த தமது உறவினர்களைப் பார்த்துச் சிரித்ததையும் அவதானிக்க முடிந்தது.

இவை குறைகள் தாம். ஆனால் சிறுவர் நாடகங்களைப் பொறுத்தவரையில் மன்னிக்கக் கூடிய தவறுகள் என்றே சொல்ல வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் பார்வையாளர்களோ, நாடகத்தின் பூரணத்துவமோ முக்கியமானவை அல்ல. மாணவர்களது மனத்தடைகளை நீக்கி, மேடைக் கூச்சத்தை அகற்றி, அவர்களது கற்பனை வளத்தையும் சுய சிந்தனையையும் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்ப்பதே முக்கியமானது

ஆங்கில நாடகத்தில் இயற்கை அன்னைக்கு மாத்திரம் தேவதை போன்ற சிறு அலங்காரம். ஏனையோர்க்கு மரங்களைக் குறிக்க பச்சை பெனியன்கள் மட்டுமே.

அதிக பொருட்செலவுள்ள அலங்கார உடைகளுக்கு இடமளிக்காமல், மிகவும் சாதாரணமான ஆடை அலங்காரங்களுடன், மாணவர்களது அபிநயம், குரல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. சிறுவர் நாடகங்களைப் பற்றிய சில தெளிவான கருத்துகளை நெறியாளர் கொண்டிருப்பதை இது உணர்த்தியது.

நாடகப்பிரதியைப் பொறுத்தவரையில் 'ஆச்சிசுட்ட வடை' மிகவும் எளிமையான, சிறுவர்களுக்குப் பரிச்சயமான கதை. வீணீர், அடுப்பு, தாச்சிபோன்ற மண்வாசனைச் சொற்களுடன் பேச்சுத் தமிழில் அமைந்திருந்தது. மாணவர்களும் சிரமமின்றிப் பேசினார்கள். ஆயினும் அவர்கள் வாயில் பல்லாண்டு என்ற சொல் மீள, மீள வந்த போது அபசுரமாக ஒலித்தது.

களவெடுத்தல் பிழை என்ற கருத்து மிக லேசாக வெளிவந்தது. ஆயினும் அறப்போதனைகளைத் திணிக்கும் வகையில் அமையவில்லை. காலத்திற்கு ஏற்ற வகையிலும், மாணவர்களது கற்பனைத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும் 'ஆச்சி சுட்ட வடை' கதையின் இறுதிப் பகுதியை மாற்றியமைத்ததில், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் திறமை பளிச்சிட்டது.

ஆங்கில நாடகம் கருத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. மரங்களை அழித்து, இயற்கை வளத்தைக் குலைத்துவிடக் கூடாது என்ற நல்ல கருத்தை வலியுறுத்தியது ஆழமான ஆங்கில வசனங்களைப் பெரும்பாலும் சரியாக உச்சரித்தாலும், ஒரு சில இடங்களில் தடுமாறினார்கள். ஆயினும் இவற்றைச் செழுமைப்படுத்தினால் இந்த ஆங்கில நாடகம், நாடகப் போட்டிகளுக்கும், தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கும் உகந்ததாக அமையும். இதனைத் தமிழ்ப்படுத்தினால், பயன்பாடு அதிகமாகும் வாய்ப்பு உள்ளது.

பொதுவாக நோக்கும் போது இரு நாடகங்களும் வெவ்வேறு நோக்கில் சிறந்தவையாகத் தோன்றின. இந் நாடகங்களை இயக்கியவர் புதிய பரம்பரை ஆசிரியரான பா. இரதவரன் ஆவார். அவரி

(11 ஆம் பக்கம் பார்க்க)

திசையின் சிறுகதை

பேராசிரியர் சர்வராகவனுக்குப் பெரிய தர்மசங்கடமான நிலைமை. என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தார் அவர். நேரம் நெருங்க நெருங்க மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

ஐந்து மணிக்கு ஒரு விருந்துபசாரம். அதற்குப் போவதா விடுவதா? என்பதுதான் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்த பிரச்சினை.

# பஜகோவிந்தம்

புரட்சி எழுத்தாளர் தருணபாவனனின் அருமை மகளுக்குத் திருமணம். அது சில நாட்களுக்கு முன் நடந்தேறி விட்டது. நாடறிந்த எழுத்தாளரான தருணபாவனன் வீட்டுத் திருமணத்தை, அழைப்பிதழ் வைத்துச் செய்திருந்தால், ஜன வெள்ளத்தைக் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. அன்பர்கள் ஆதரவாளர்கள், ரசிகர்கள் இலக்கிய ஜாம்பவான்கள் என்று கூட்டம் திணறடித்திருக்கும்! அதனால் அவர் அதனை மிக நெருங்கிய நண்பர்களுடன் பதிவுத் திருமணமாக நடத்தி விட்டார்.

அதையொட்டி பொறுக்கியெடுத்த இலக்கியகாரர், பத்திரிகையாளர் பல்கலைக்கழகப் புத்தி ஜீவிகள் என்ற மட்டத்தில் சிலரை அழைத்து இன்று விருந்து வைக்கின்றார்.

பேராசிரியருக்கும் அழைப்பு கிடைத்தது. அழைப்பென்றால் சாதாரண அழைப்பல்ல, முதல் அழைப்பே அவருக்குத்தான், அவர் பிரதம விருந்தினராகக் கலந்து சொள்ள வேண்டுமென்று அன்புக் கட்டளை

தருணபாவனன் அழைப்பிதழ் கொண்டு வந்த சமயம் பேராசிரியர் வீட்டிலிருக்கவில்லை. தருணபாவனன் சோர்ந்துவிடாமல் அழைப்பிதழை எடுத்து, அதன்பின் பக்கத்தில் "அம்மாவையும் அழைத்துக் கொண்டு வேளையோடு வந்து விடுங்கள். நீங்கள்தான் கொண்டாட்டத்தைத் தொடக்கி வைக்கிறீர்கள்" என்று எழுதி பேராசிரியரின் துணைவியாரிடம் கொடுத்து விட்டுப் போயிருந்தார்.

இப்போது நேரம் நாலு முப்பது இன்னும் முப்பது நிமிடங்கள் ..... அதற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட வேண்டும்.

'ஓஹோ'...'ஓஹோ'...என்று கொடி கட்டிப்பறக்கும் எழுத்தாளர் வீட்டுக் கலியாண விருந்தில் பங்குகொள்ள எந்தப் பெண்ணுக்குத்தான் ஆசை இருக்காது? அங்கே இன்னும் எத்தனை எழுத்தாளர் ப்ரமாக்களைச் சந்தித்து அளவளாவ முடியும், அப்படிச் சந்திப்பதே ஒரு ஜென்மலாவண்யமல்லவோ? அந்தக் கிளுகிளுப்பில், அவரது மனைவியானவள் அன்று காலை அவர் பல்கலைக்கழகத்துக்குப் புறப்படும்போதே. அதை நினைவுபடுத்தியிருந்தாள்,

"அஞ்சு மணிக்கு தருணபாவனர்வீட்டுக் கொண்டாட்டத்துக்கெல்லே போறவேணும் மறந்திடாமல் வெள்ளென வந்திடுங்கோ"

இப்போது அவள் தானே அலங்கரித்துக் கொண்டு அவர் வரவுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்.

அவர் மறக்கவில்லை. மறக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார், டொக்ரர் ராஜேஸ்வரன் சொன்ன சங்கதியே அவர் மனத்தைக் கடைந்து கொண்டிருந்தது; அது அசிங்கமாக, கொடூரமாக மனதைக் குதறிக் கொண்டிருந்தது.

தருணபாவனன், தனது மகளுக்குத் திருமணம் செய்து வைதத்துள்ள மாப்பிள்ளைப் பெடியன் ஆண்மையற்றவனாம்! திருமண வாழ்க்கைக்கே தகுதியற்றவனும் ...

அவனை, எழுத்தாளர் தருணபாவனனே ஒரு நண்பருடன் டொக்ரர் இராஜேஸ்வரனிடம் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பினாராம். தாய்க்கு ஒரே பிள்ளையான அவன் பெரும் சொத்துக்காரனும். பட்டினத்தில் பல காணிகளுக்குச் சொந்தக்காரனும் ...

"இப்படிப்பட்ட சொத்துக்காரனை, அவனுடைய நாற்பது வயது வரை, பெண்ணைப் பெற்ற 'பாவி' ஒருத்தரும் கண்ணெடுத்தும் பாராதிருக்க, இந்தத் தருணபாவனன் மட்டும் துணிந்து அவனுக்குக் கைகொடுக்க முன்வந்ததற்கு அவனுடைய சொத்துத்தான் காரணமோ, அன்றி அவரது புரட்சி மனப்பான்மையோ?" என்று டொக்ரர் பேராசிரியரிடம் கேட்டே விட்டார்.

அப்படிக் கேட்டது பேராசிரியர் சர்வராகவனின் குரல் வளையை நெருக்கியதுபோலிருந்தது!

பல நவீன யந்திரங்களையும் கருவிகளையும் கொண்டிருந்த ஒரு தச்சுத தொழிற்சாலையின் முதலாளி தருணபாவனன். அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களைச் சுரண்டிச் சேர்க்கும் பணத்தில், பிரமுகர்களுக்கு நைவேத்தியம் செய்து தனக்குப் பிரபலம் தேடும் முயற்சியில் முதலாளித்துவக் கொடுமைகளையிட்டு மூச்சும் விடாது, சாதிப் பிரச்சினையை மாத்திரம் சாக்கொண்டிருக்கும் ஒரு நவீன சோஷலிஸவாதி என்று அவரைப்பற்றிப் பொதுவான அபிப்பிராயம்.

மேலும், நல்லதும் சொல்லாததுமான கிசுகிசுக்கள், பேராசிரியரின் காதுகளில் விழுந்திருந்தாலும், அவர் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. பேரோடு, புகழோடு வாழுகின்றவர்களுக்கு இப்படியான கல்லெறிகள் சகஜமானவையே என்று அலட்சியப் படுத்தியிருந்தார்.

ஆனால் இப்போது? இரு தினங்களுக்குமுன் டொக்ரர் இராஜேஸ்வரன் சொன்ன பயங்கரச் செய்தியின் பின்...?

பையனை டொக்ரரிடம் அனுப்பி, அவனுடைய நபுஞ்சகம் நிவர்த்தி செய்யக்கூடிய குறைபாடாயிருந்து, அதை நிவர்த்தி செய்துவிட்டால், அவருடைய மகள் செல்வச் செழிப்பில் புரள வாய்ப்பு ஏற்படும்.

அல்லது. அவருடைய நாவல்களில் வரும் நயினார் பாத்திரங்கள், கற்பழிப்புக்கெனச் சிருட்டிக்கப்படுகிற பொடியன்களைத் தீர்த்துக்கட்டி விடுவது போலச் செய்து, சொத்துக்களை அபகடத்துப் பண்ணிக் கொண்டு, வேறு வழி மார்க்கங்களைப் பார்ப்பது போலவும் செய்யலாம்.

இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கவே தலை கிறுகிறுத்தது பேராசிரியருக்கு. இரத்தம் உறைவது போல இருந்தது.

தன் எழுத்திலும் பேச்சிலும் பஞ்சப்பட்டமக்களுக்குச் சுதி மோட்சம் காட்ட வந்த புரட்சி எழுத்தாளர் தருணபாவனன், இப்படிச் செய்திருப்பாரோ என்று கற்பனை பண்ணுவதே அபத்தம், மஹாபாபம் என்று அவருடைய தத்துவார்த்த மனசு அல்லறப்பட்டது.

டொக்ரர் இராஜேஸ்வரன் சொன்னதை உரைத்துப்பார்ப்பதற்கு அவர் ஓர் எழுத்தாளர் அல்லர்; வார்த்தைகளோடு விளையாடும் டப்பாங்கூத்துக் காரர் அல்லர். பொறுப்பு வாய்ந்த வைத்தியர்; கண்ணியமானவர்; சகலராலும் தெய்வமாகப் போற்றப்படுவபர்.

மனம் வரவர அருசையாகிக் கொண்டிருந்தது. விருந்து வைபவத்துக்குப் போகாமல் விடுவது என்று உறுதிப்பட்டுக் கொண்டு வந்தது. ஆனால் ? அங்கும் தளர்ந்த நிலை!

எப்படிப் போகாமல் விடுவது? தருணபாவனனுக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்டிருந்த கடமைப்பாடுகளுக்குக் கைமாறு செய்ய வேண்டும்...

ஒன்றிரண்டு தடவைகளில் தனக்கு ஏற்பட்டிருந்த பொருளாதாரக் கஷ்டங்களின்போது தருணபாவனன் தயங்காது செய்த உதவிகளுக்கு நிவாரணம் தேடவேண்டுமே ..

ஒரு சமயம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்கச் செல்ல வேண்டியிருந்த போது அந்தப் பல்கலைக்கழகமே அவரது பயணச் செலவுகளைப் பொறுப்பேற்றிருந்த போதிலும்—மேலதிகத் தேவைகளுக்காக அவர், தருணபாவனனை அணுகியபோது, மனக் கோணல் எதுவுமின்றிச் செய்த உதவி, பேராசிரியரின் மன வாசலில் வந்து தலைநீட்டியது.

இலட்சியங்களைப் பணத்துக்கு ஈடுவைக்கும் நிர்ப்பந்தம் ஒன்றும் புதிய சித்தாந்தமல்லவே ...

தருணபாவனனின் நாவல் ஒன்று வெளிவந்த சமயம், சக பேராசிரியர் ஒருவர், அந்த நாவலின் அறிமுகக் கூட்டங்கள் அனைத்தையும் குத்தகை எடுத்தது மாதிரிப்பட்டி தொட்டி யெல்லாம் பேசித் திரிந்ததற்கும், தற்போதைய தனது மன நிலைக்கும் ஒரு ஒற்றுமை இருப்பதுபோல் தெரிந்ததை, விளக்கெண்ணெய் குடித்த மன அவஸ்தையில் அங்கீகரித்தது அவர் அறிவு.

பெற்ற பிள்ளையின் வாழ்க்கையைச் சொத்துக்காகப் பலிகொடுப்பவனுடன் என்ன கொண்டாட்டம்? என்ன விருந்தும் கேளிக்கையும்?

'ச்சீ! இலக்கிய உலகம் முழுவதும் வெறும் பம்மாத்துத்தானோ?' என்ற எண்ணம் மனதில் புழுவாய் நெளிந்தது.

## கார்த்தி நேசன்


விருந்துக்குப் போகாமல் விட்டால் என்ன? என்ற எண்ணம் வலுப்பெற்றது.

போகாமல் விடலாம்...

தருணபாவனன், வேறு ஒரு வழியில் பேராசிரியருக்குச் சுருக்குப் போடுவான்:

"நயினர், கண்ட நிண்ட சாதியள் வீட்டுக் கொண்டாட்டங்களுக்கெல்லாம் போகுதாம்மா...? பேந்து எளியஞ் சாதியள் வீட்டை வாய் நனைக்க வேணடியெல்லே வரும்!" என்று நக்கலடிப்பான்.

'நேரில் கேட்டால் சமாளித்து விடலாம்; கூட்டங்களில் பேசி அறுவை வைத்தியம் செய்து விடுவான்!'



இந்த எண்ணம் தோன்றியதும் பேராசிரியர் துடித்துப் போனார்; நெருப்பில் மிதித்தவர் போலப் பதைபதைத்தார்.

இந்த அவப் பெயரைச் சகிப்பவர் யார்? சாதியை ஒழிக்க முற்படாதவர்களுமில்லை; சாதியை மனத் தூய்மையோடு ஒழித்தவர்களுமில்லை.

தருணபாவனனும் ஒடுக்கப்பட்டவர்களின் விமோசனத்துக்காகவே தன்பேனாவை ஓட்டிக் கொண்டிருக்கிறார். சாதி அடக்கு முறைக்கும், அதற்கு எதிரான போராட்டத்துக்கும் காமவிகாரமே அடிப்படை என்று,ஏதோ ஒரு தத்துவார்த்தத்தைக் கண்டறிந்து அதன் அடிப் படையிலே எழுதிக் கொண்டிருக்கிறார், சிக்மண்ட் ஃபிராய்டுக்கு அப்பன்!

பேராசிரியர், தருணபாவனன் வீடுத் திருமண விருந்துக்குச் செல்வதெனத் தீர்மானித்து விட்டார். எவ்விதச் சபலமுமின்றி அந்த முடிவுக்கு வந்து விட்டார்.

ஆனால், அவர் மனைவி?

இன்றில்லாவிட்டாலும் இன்னொருநாள், அவர் மனைவிக்குத் தருணபாவனனின் இந்தக் கொடூரம் தெரியவந்தால் "இப்படிப்பட்ட அயோக்கியனுக்கா துணை போனீர்கள்?" என்று அவர் முகத்தில் காறித் துப்புவாள்! அவளும் பெண்ணல்லவா?

அதனால் அவளை விட்டுப் போவதென முடிவு செய்தார்.

பல்கலைக்கழக வளவில், தனக்குரிய அறையில் முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

தருணபாவனன் வீட்டு வாசலில், பேராசிரியர் சர்வராகவன் ஸ்கூட்டரின் வேகத்தைத் தணித்து நிறுத்துவதற்கிடையில். அவரதும் மனைவியினதும் வருகையைப் பார்த்துப் பார்த்துப் பூத்த கண்களுடன், தருணபாவனன் அவ்விடத்துக்கு வந்து விட்டார்.

ஸ்கூட்டரின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு பெருத்த ஏமாற்றத்துடன் அவர் முகத்தைப் பார்த்தார்.

தருணபாவனனின் மன நிலையைப் புரிந்து கொண்ட சர்வராகவன், "ஆஞ்சை, தருண! நீ என்ன கேக்கப் போறாய் எண்டு எனக்குத் தெரியும். இந்தப் பெண்டுகளை நம்பி ஒரு காரியம் செய்ய ஏலாது கண்டியோ... அதுகள் திடீரெண்டு எங்கடை காலை வாரி விட்டிடுங்கள். இண்டைக் கெண்டு மணிசிக்கு வில்லண்டமாய்ப் போச்சு! தெண்டிச்சுப் பார்த்தன். மாட்டன் எண்டிட்டா, என்று வரட்டுச் சிரிப்புடன் சொல்லி முடித்தார்.

பெண்களுடைய இப்படிப்பட்ட விவகாரங்களில் புரட்சி எழுத்தாளர் சரியான ஆசாரசீலர் என்பதைத் தெரிந்து வைத்திருந்த, சர்வராகவன் தருணம் பார்த்து அவிழ்த்து விட்டார்.

"அவ கட்டாயம் இன்னொருநாளைக்கு வருவா. நான் கூட்

(9ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களையும் ஏழைகளையும் பாதுகாக்க சட்ட உதவிச் சங்கம்

ரகேலாவும், ஷாரிபுனும் ஏழைகள். தங்கள் கணவன்மாரால் கைவிடப்பட்டவர்கள்.

ரகேலாவின் தந்தை நெல் விவசாயி. அவரின் குடும்பம் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலிருந்து 93 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மதரிபூர் கிராமத்தில் வாழ்ந்தது. அவர் தனது அயல் வீட்டுக்காரரின் மகனுக்கு தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கணவனால் கைவிடப்பட்டு இப்பொழுது மறுபடியும் தனது தந்தையுடனேயே வாழ்கிறார் ரகேலா. அவருக்குக் குழந்தை இல்லை. தான் கர்ப்பம் தரித்ததாகவும் கணவன் ஏதோ மருந்தைக் கொடுத்துக் கருவைக் கலைத்து விட்டதாகவும் கூறுகிறார்.

**ஜவதூர் ரஹ்மான்**

தன்னைத் துரத்திவிட்டு வேறொரு பெண்ணைத் தனது கணவன் திருமணம் முடிக்க முயல்வதாகக் குற்றம் சாட்டுகிறார் அவர்.

ஷாரிபுன் பெற்ற அனுபவம் சற்று வேறுபட்டது. தனது தந்தையுடன் மதரிபூருக்கு அருகேதான் அவரும் வாழ்ந்தார். இளமையிலிருந்தே பணக்கார வீடொன்றில் வேலை செய்தார். அவரின் சொந்த மச்சானுக்கு நான்கு வருடங்களுக்கு முன்பு கலியாணம் செய்து வைத்தார்கள். தனது தாயாரின் விருப்பத்திற்கு எதிராகவே ஷாரிபுன்னை அவரின் கணவர் திருமணம் செய்தார். அதனால் ஷாரிபுன்னை அவரின் மாமியார் மருமகளாக ஏற்க மறுத்துவிட்டார். தாயைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன்னைக் கணவர் துரத்திவிட்டதாக ஷாரிபுன் கூறுகிறார். இரண்டு வயது மகனையும் அழைத்துக்கொண்டு பெற்றோர் வீட்டுக்குத் திரும்பினார். சில வாரங்களுக்கு முன் அந்தக் குழந்தை இறந்துவிட்டது.

ரகேலாவும் ஷாரிபுன்னும் மதரிபூர் சட்டஉதவிச் சங்கத்தின் உதவியை நாடியுள்ளனர். ஷாரிபுன் சார்பில் ஜீவனாம்ச வழக்கை சட்ட உதவிச் சங்கத்தினர் தாக்கல் செய்துள்ளனர். தாக்கல் ரகேலாவின் சார்பில் உஷாமின், எனப்படும் பஞ்சாயத்தைக் கூட்டியுள்ளனர்.

ரகேலாவின் சார்பில் பஞ்சாயத்தைக் கூட்டியதன் நோக்கம் யாவரும் ஏற்றுக் கொள்ளும் நல்ல தீர்வு ஒன்றைக் காண்பதே. கிராம முதியவர்களைக் கொண்ட பஞ்சாயத்து பாரம்பரிய வழக்கு முறைகளுக்கும் இயற்கை நீதிக்கும் ஒப்ப தீர்வுகளைக் காணும் பண்பைக் கொண்டது.

பஞ்சாயத்துக் கூட்டப்பட்ட போது ரகேலாவின் கணவன் வரவில்லை. அவரின் தந்தை மட்டும் வந்திருந்தார். தனது மகன் வராத காரணம் தனக்குத் தெரியாது என்றார். அவர் வேலை செய்யும் தொழிற்சாலையிலிருந்து வருவதற்கு ஒரு நாளுக்கு மேல் பிடிக்கும். தனது மருமகளை ஏற்றுக் கொள்ளத் தான் தயார் என்றார் மாமனார். ஆனால் ரகேலாவுக்குக் கணவனிடம் திரும்ப விருப்பமில்லை. ஆனால் பஞ்சாயத்தின் முடிவைத் தான் ஏற்று நடப்பதாக உறுதியளித்தார். ரகேலாவின் தந்தைக்கு தனது மகள் தனது கணவனுடன் சேர்ந்து வாழ்வதில் பெரிய விருப்பம்.




பங்களாதேஷில் வாழும் ஏழை மக்களுக்குத் தங்களின் உரிமைகளைப் பற்றிய அறிவு மிகக் குறைவு. தங்களின் உரிமைகளைத் தாமாகவே பாதுகாக்கும் திறமையும் அவர்களிடம் இல்லை. சட்டத்தின் முன் எல்லாரும் சமம்; ஆனால் நடைமுறையில் அவ்வாறில்லை. பணக்காரரைப் பாதுகாக்கும் சட்டம் ஏழைகளைக் கைவிட்டு விடுகின்றது.

ஏழைகளுக்குள்ளும் பெண்களின் நிலை படுமோசம். பெண்கள் பலவிதமான கஷ்டங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். சின்னக் காரணங்களுக்காகப் பெண்களை வீட்டிலிருந்து விரட்டுகிறார்கள். விவாகரத்துச் செய்கிறார்கள்! ஜீவனாம்சம் கூட கொடுக்க மறுக்கிறார்கள். அடிக்கிறார்கள். கொடுமைப்படுத்துகிறார்கள்.

பெண்களை இந்தக் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக, புதிய சில சட்டங்கள் அண்மைக்காலத்தில் இயற்றப்பட்டுள்ளன, அத்துடன் சட்ட உதவிச் சங்கங்களும் ஆரம்பிக்

(11ஆம் பக்கம் பார்க்க)

---

## பஜகோவிந்தம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிக் கொண்டு வாறன்! என்று சமாதானமும் கூறினார்

தருணபாவனன், சார்ந்து நிலத்தைப்பார்த்தார்.

"நான் வந்திட்டன்தானே! பிறகென்ன? எல்லாம் வெல்லுவம். வடிவாச் செய்வம்— அது சரி, உங்கை ஆர் ஆர் வந்திருக்கினம்?" என்று கேட்டுக் கொண்டே ஸ்கூட்டரிலிருந்து இறங்கினார்.

அதை ஒரு பக்கமாக நகர்த்தி நிறுத்தினார். தருணபாவனனின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு நடந்தார்.

வீட்டு முற்றம் கலகலப்பாக இருந்தது. தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிவப்பு நிறக் கொடிகள்!

வட்டம் வட்டமாக ஆசனங்கள் அடுக்கப்பட்டிருந்தன ஆண்களே பெரும்பாலோர், பெண்மணிகளும் கணிசமான தொகையினர். சிலர் மட்டும் ஜோடிகளாக வந்திருந்தனர்.

நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் மண மக்கள் அமர்ந்திருந்தனர்.

தருணபாவனன் பேராசிரியரை அழைத்துவந்து, அவருக்கென விசேடமாக ஒழுங்கு செய்திருந்த இடத்தில் அமர வைத்தார். பக்கத்து ஆசனம் நெடு மூச்செறிந்தது.

மனக்குழப்பங்களுடன் போராடி, திடீரென எடுத்த முடிவுடன் புறப்பட்டு வந்த சர்வராகவன், தருணபாவனனைச் சமாளித்ததனால் ஏற்பட்ட களைப்பை நீங்குவதற்கு, கை லஞ்சியை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு அவதானமாக அந்த இடத்தை நோட்டமிட்டார்.

எப்படியும் நூற்றுக்குக் குறையாத பிரபலங்கள் அங்கு கூடியிருந்தன.

வேளையில் எதிர்பார்த்தது போலவே, எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள். தொழிலதிபர்கள் என்று பொறுக்கியெடுத்த கூட்டம்.

இவர்களில் சிலரைப் பற்றி பேராசிரியர் நேரில் அறிந்ததும் கசமுச மூலம் காதில் விழுந்தவையுமான தகவல்கள், நெஞ்சாழத்திலிருந்து நினைவுக் குமிழ்களாய் மேலெழுந்ததை அவரால் தடுக்க முடியவில்லை.

'டுப்மாஸ்டர்' பட்டம்பெற்ற இலக்கியக் கொம்பனைக் கண்டதும் பேராசிரியருக்குப் பெரும் ஆச்சரியம்! காலம் முழுவதும் தருணபாவனனுக்குப் பரம விரோதி. இளமைக்காலக் காதல்விளையாட்டுக்கள் பற்றிக் கதைகள் எழுதிக் கோடேறி வழக்கும் ஆடியவர், திடீரென்று இப்போது கொஞ்ச நாட்களாக 'நண்பர், நண்பர்' என்று குத்தி முறிகிறார் இந்த மர்மம் விளங்காத நிலையில், அவனை நேரில் கண்டதும் பேராசிரியரின் புருவங்கள் உயர்ந்து நெருங்குண்டன.

'முகமூடிகளைக் கழற்றி வைத்து விட்டுச் சிறிது நேரம் பேசிச் சுகித்திருப்போம்!' என்று எழுத்தாளர்களுக்கு அழைப்புவிடுத்துக் காமக்கதைகள் பேசி, மன விகாரங்கள் தீர்த்த ஒன்று கூடல் நிகழ்ச்சி நடத்தியவர் இவர்தான்! தன்னைச் சார்ந்த எழுத்தாளர்கள் முகமூடியணிந்த வேஷதாரிகள்தான் என்று பிரகடனம் செய்த பெருமைக்குரியவர்......

நீல நிர்வாகத்தில் மாடி வீடும், பச்சை நிர்வாகத்தில் மணியாட்டிக்குப் பதவி உயர்வுப் பெற்று, வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்செய்ய, புத்திர செல்வத்தைக் கருங்காலியாக வேலை செய்ய விட்டு, பின்னர் நிரந்தரமாகவே வேலை பெற வங்கி நிர்வாகத்துக்குப் பந்தம் பிடிக்கும் முன்னணிப் பகட்டு எழுத்தாளர் அவர் அருகில் ...

'எழுத்தை விமர்சியுங்கள்; எழுத்தாளனை விமர்சிக்காதீர்கள். அப்படி எழுத்தாளரை விமர்சிப்பவர்களை ஒதுக்கித் தள்ளுங்கள்! என்று பகிரங்க வேண்டுகோள் விடுத்த பரிகார எழுத்தாளர் இன்னொரு பக்கத்தில்......

'நல்ல கதை எழுத ஒரு போதும் துணியான்!' என்று தருணபாவனன் தூக்கி வீச, 'இலக்கியக் கொடு முடி' என்று அவரைப் புகழ்ந்து எழுதியதால். அண்டை நாட்டில் படித்துக் கொண்டிருந்த தம்பிக்குப் பணவுதவியும் பெற்று, வாரிசு' ஆகவும் பட்டம்சூட்டப்பெற்ற நசியல் எழுத்தாளர் மற்றொரு பக்கத்தில்......உயர்சாதி ரீச்சர்ப் பெட்டையொருத்தி, தாழ்த்தப்பட்ட மாஸ்ரர்ப் பொடியனை 'லவ்' பண்ண, 'ஆதென்னடா வீண்வம்பு!' என்று தலைகிறுகிறுத்து, அவனை 'ட்ரான்ஸ்பேர்' எடுத்துக் கொண்டு வேறு இடத்துக்குப் போகச் செய்த இவர்தான் புரட்சிஎழுத்தாளரின் வாரிசு...

இன்னும்,

சப்புகள் சருகுகள், திண்டுகள் — முண்டுகள் இப்படிப் பல ரகம்!

எல்லாமே வேஷங்கள் தோஷங்களாக்கப்பட்டன பேராசிரியருக்கு. தலையைச் சொறிந்து கொண்டார் அவர்.

லோக்கல் கட்சிப் பிரமுகர் இப்பாலும், பிரபல பத்திரிகையாளர் அப்பாலுமாக புரட்சி எழுத்தாளர் தருணபாவனன், விருந்தினர் மேசைகளில் உணவுப் பட்சணங்களும் பானங்களும் பரிமாறப்படுவதைப் பார்வையிட்டுக் கொண்டு வந்ததைக் கண்டதும் அவருக்குத் தலை சுற்றியது.

கொடூரத்தனமான இந்தக் கலியாணத்தைத் தடுத்து நிறுத்தும்படி, தருணபாவனின் உறவினர் ஒருவர், இந்தக் கட்சிப் பிரமுகரிடம் ஓடிப்போய் முறையிட, 'அப்படியா சங்கதி? 'பிளாக் மெயில்' செய்ய நல்ல விஷயம்!" என்று சொன்னவராம் இந்த மகானுபவர் .. ஓ! காசு பிடுங்க நல்ல விஷயம்!

தருணபாவனன் அப்போதைக்கப்போது அர்ச்சனை செய்கிற இறைச்சி, மீன், பழவர்க்கங்களுக்காக, நாளும் கிழமையுமாக அவரைத் தூக்கி எழுதுகிறவராம் மற்றவர் ...

பிரபலம் பெறுவதற்குச் சிறந்த மார்க்கம் எழுதுகோலைத் தூக்குவதுதானே. ஏன், கன்னக் கோலைத் தூக்கினால் அதனைப் பெற முடியாதோ ...?

'இலக்கியத்தின் முக்கிய பயன்பாடு மனிதனை மேல் நிலைப்படுத்துவதே!" என்று நாலைந்து தினங்களுக்கு முன்பும் பேராசிரியர் ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பேசியிருந்தார்.

எழுத்திலே புரட்சிக்கனலைத் தெறிக்கவிட்டுக் கொண்டு பெற்ற பிள்ளையைச் சொத்துக்காக, ஆண்மையில்லாத ஒரு பொம்மையிடம் பலிகொடுத்த ஒரு துரோகி — சமூகவிரோதியின் விருந்துபசாரத்தில் பங்கு கொள்ள வந்திருக்கிறோமே

மனதில் அளவுகடந்த அருவருப்புத் தோன்றவே, சலிப்புடன் கூட்டத்தைச் சுற்றிப் பார்வையை ஓடவிட்டார்.

மணப் பெண்ணும் மாப்பிள்ளையும் இருந்த இடத்தில் பார்வை நிலைகொண்டது.

அவரது ஆராய்ச்சி உள்ளம் ஆவலோடு அவர்களை உற்று நோக்கியது.

சோபை சுழன்று இருள் படிந்து பேயறைந்த முகம். ஏமாற்றத்தை மறைக்க முடியாமல், எதை எதையோ வெறிச்சென்று பார்த்துக் கொண்டிருந்தாள் மணமகள்.

'மணமகன் ஒரு குழந்தைப் பிள்ளையைப் போல அலங்கார விநோதங்களையும், தனக்கு முன்னே பரிமாறப்பட்டிருக்கும் பட்சணங்களையும் மகிழ்ச்சி பொங்க மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அருகிலிருந்த பூச்சாடியிலுள்ள மலர்ச் செடிகளையும் இடைக்கிடை பார்த்து மகிழ்ந்தான்.

தருணபாவனன் பேராசிரியரிடம் வந்தார். "எல்லாம் சரி இனித் தொடங்க வேண்டியதுதான்" என்று சொன்னார். தானும் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தார்.

பேராசிரியர் தலையசைத்தார். மெல்ல எழுந்ததும் சபையில் மௌனம் நிலவியது.

முன்னே இருந்த 'ஜிஞ்சபீயர்' நிரப்பப்பட்டிருந்த கிளாசை எடுத்துத் தன் முகத்துக்கு நேரே நீட்டினார்.

அவ்வாறே மற்றைய விருந்தினரும் தமது கிளாசுகளை எடுத்து முன்னே நீட்டினர்.

பேராசிரியர் சர்வராகவன் அமைதியான குரலில் கூறினார்: பேருழைப்பால் பெரும் சாதனைகள் புரிந்து வரும் புரட்சி எழுத்தாளர் தருணபாவனன் அவர்களின் செல்வ மகள் மல்லிகா-ஜீவராஜ் தம்பதியரின் புதுமண வாழ்வு சிறப்புற்றோங்க "எல்லோரும் இதய பூர்வமாக வாழ்த்துவோமாக ... சியர்ஸ்!"

"சியர்ஸ்ஸ்ஸ்" அனைவரும் ஒருமித்த குரலில வாழ்த்தொலி எழுப்பினர். சிறிது நேரத்தில் பஜனை களைகட்டத் தொடங்கி விட்டது.

# இணையப்போகும் ஜேர்மனிகள்

## புதிய கலப்பு அரசியல், பொருளாதாரம்

சென்ற வாரம் கிழக்கு ஜேர்மனியில் நடைபெற்ற முதலாவது சுதந்திரப் பொதுத் தேர்தலில் கொன்சர்வேட்டிவ் கூட்டணியினர் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே அரசியல் அவதானிகளால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாயினும், இவ்வளவு பெரும்பான்மையான வெற்றி அவர்களுக்குக் கிட்டும் என எதிர்பார்க்கப்படவில்லை.

கொன்சர்வெட்டிவ் கூட்டணியின் முக்கிய அமைப்பான கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் 40.91 சத விகித வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. 'சமூக ஜனநாயகக் கட்சிக்கு 21.84 சத விகித வாக்குகளும் முன்னாள் அதிகாரத்திலிருந்த கொம்யூனிஸ்ட் கட்சிக்கு 16.33 சதவிகித வாக்குகளும் கிடைத்துள்ளன.

ஒரு கோடியே 23 லட்சத்து 83 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட இத்தேர்தலில் 93.22 சதவிகித மக்கள் வாக்களித்துள்ளனர். 400 ஆசனங்களைக்கொண்ட கிழக்கு ஜேர்மன் நாடாளுமன்றத்தில் 193 ஆசனங்களை கொன்சர்வெட்டிவ் கூட்டணி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த இத்தேர்தலின்மூலம் ஜேர்மன் நாட்டின் எதிர்காலம் என்ன நிலையில் அமையப்போகிறது என்பதை அறியப் பலரும் அக்கறை கொண்டுள்ளனர்.

கிழக்கு ஜேர்மனியில் வெற்றி ஈட்டியுள்ள கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியே தற்போது மேற்கு ஜேர்மனியின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகிறது. மேலும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி அங்கம் வகிக்கும் கூட்டணியின் போஷகராக மேற்கு ஜேர்மன் முதல்வர் ஹெல்மட் கோல் இருக்கிறார்.



### உருளும் உலகில்

கொர்பச்சேவின் பெரிஸ்த்ரோய்க்காவால் கிழக்கு ஜேர்மனியில் முடுக்கி விடப்பட்ட நிகழ்வுகள், இன்று அங்கு அதிகாரத்திலிருந்த கொம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தை வீழ்த்தியதோடு மட்டும் நிற்காமல், பிரிக்கப்பட்டிருந்த இரண்டு ஜேர்மனிகளையும் இணைப்பதற்கான நடவடிக்கையாகவும் வடிவெடுத்துள்ளது. இதன் விளைவே கிழக்கு ஜேர்மனியில் நடந்து முடிந்த மேற்படி சுதந்திரத் தேர்தலாகும். அரை நூற்றாண்டுக்கு முன்னர், முப்பதுகளின் நடுப்பகுதியில் ஹிட்லர் காலத்தில் நடந்த தேர்தலுக்குப்பின் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலே இது.

இத்தேர்தல் என்பது, இரண்டு ஜேர்மனிகளும் இணைக்கப்படுவதற்கான ஒரு வெளிப்படையான அறைகூவலே. இத்தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றதான நிகழ்ச்சி, இரண்டு ஜேர்மனிகளும் இணைவதற்கு மக்கள் காட்டிய ஆதரவையே காட்டி நிற்கிறது.

ஜேர்மனிகள் இரண்டும் இணையப் போகின்றன என்பதன் முன்னறிவிப்பாகவே இரண்டு ஜேர்மனிகளையும் பிரித்த பெரும்சுவர் சிறிது காலத்துக்கு முன்னர் தகர்க்கப்பட்டது. இப்போது நடந்து முடிந்த தேர்தல் அதற்கு உத்தரவாதம் வழங்கியுள்ளது.

அப்படியானால் ஜேர்மனிகள் இரண்டும் ஒன்றாகப்போவது உறுதிப்படுத்தப்பட்டு விட்டதென்றால், இவ்விணைப்பால் ஏற்படப்போகும் பலாபலன்கள் என்ன?

இரண்டு ஜேர்மனிகளும் இணைவதில் சிக்கல் தருவனவாக உள்ள விஷயங்கள் இரண்டு நாடுகளும் இதுகால வரை இயங்கிவந்த அரசியல், பொருளாதார அமைப்பினால் ஏற்படுகின்றன. கிழக்கு ஜேர்மனி ரஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்ட சோஷலிச அமைப்பின் வாரிசாக இயங்கி வந்த அதே நேரத்தில் மேற்கு ஜேர்மனியே மேற்கத்தைய முதலாளித்துவ அமைப்பிற்குரிய ஜனநாயக அரசியல் பொருளாதார முறைகளைப் பேணுவதாக இருந்து வந்துள்ளது.

பொருளாதார அரசியல் நோக்கில் இவ்விரண்டு நாடுகளும் அடிப்படையான வித்தியாசங்களைக் கொண்டியங்கியவை என்பது தெளிவு. சந்தை விற்பனையை நோக்கி, லாப நட்டமுறையில் பொருளாதார உற்பத்திகளை மேற்கொண்ட மேற்கு ஜேர்மனிக்கும், சந்தை விற்பனை நோக்கற்ற திட்டமிட்ட அரசால் நிர்வகிக்கப்பட்ட சோஷலிச பொருளாதார முறைக்கும் பாரிய வித்தியாசம் உண்டு. இரண்டு ஜேர்மனிகளும் இணையும் பட்சத்தில் இவ்விரண்டு போக்குகளையும் எவ்வாறு இணைப்பது என்பதே முக்கிய பிரச்சினையாகும்.

கொர்ப்பச்சேவினால் கொண்டு வரப்பட்ட பெரிஸ்த்ரோய்க்காவுக்கு முன்னர், கிழக்கைரோப்பிய நாட்டு மக்களின் துன்பத்துக்குரிய முக்கிய காரணம், பொருளாதாரப் பிரச்சனை அன்று. அவர்களது துன்பங்களுக்கு முக்கிய காரணம், அவர்கள் தமது தேவைகளையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தமுடியாமல் சகல ரீதியாகவும்—குறிப்பாக எழுத்து, பேச்சு சுதந்திரம்—ஒடுக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இந்தக் கட்டுப்பாடு, கொம்யூனிஸ்ட் கட்சியின் வீழ்ச்சியோடு தூக்கியெறியப்பட்டபோது கிழக்கு ஐரோப்பிய மக்கள் புதிய, ஆரோக்கியமான சுதந்திரக் காற்றைச் சுவாசித்தனர். கிழக்கு ஜேர்மன் மக்கள் தமது தடைச் சுவர்களை உடைத்துக்கொண்டு மேற்கு ஜேர்மனிக்குத் திரள் திரளாக வந்தனர். இப்படி அவர்கள் வந்தபோது உண்மையில் அவர்கள் ஒரு புதிய இடத்தை வேடிக்கை பார்ப்பதுபோல் வந்தனரேயொழிய, மேற்கு ஜேர்மனியின் பொருளாதார அரசியல் அமைப்பால் ஆகர்ஷிக்கப்பட்டவராய் வரவில்லை. இதனாலேதான் மேற்கு ஜேர்மனிக்கு வந்த பல கிழக்கு ஜேர்மனியின் இளைஞர்கள், தாம் திரும்பிச்செல்லுகையில், "உங்களுடைய ஜனநாயகத்தையும் எங்களுடைய சோஷலிசத்தையும் இணைத்து வாழ முற்படுவோம்" என்று சொல்லிச் சென்றனர்.

□□ சிவா □

இவர்கள் கூறிய மேற்படி இணைப்பு மிகவும் முக்கியமானது. இது கிழக்கு மேற்கு ஜேர்மனிக்கோ அல்லது கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமோ உரிய பொருளாதார, அரசியல் கலப்பல்ல. முழு உலகுக்குமே இத்தகைய கலப்பு பொருத்தமாகப் போகிறது என்பதையே இக்கூற்று காட்டுகிறது எனலாம். கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இதன் முதல் பரீட்சார்த்தக் களமாக அமையலாம். □

# கொம்யூனிச நாடுகளிலே

## முன்னணிக் கட்சிக்கு ஏற்பட்டுவரும் கதி

□ றெஜி சிறிவர்த்தன

தமிழில்: கனகு □

கிழக்கு ஐரோப்பா முழுதிலும் தற்பொழுதுள்ள அரசியலமைப்பில் கொம்யூனிஸ்ட் கட்சி வகிக்கும் முன்னணிப் பங்கிற்கே, பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. கொம்யூனிஸ்ட் கட்சியே முன்னணிக் கட்சி என்ற ஷரத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசமைப்பில் இடம் பெற்றிருக்கின்றது. இந்தச் சட்ட ஏற்பாடும், அதற்கு உறுதுணையாக உள்ள பலாத்காரத்தைப் பயன்படுத்தும் அரச சாதனங்களுமே கொம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் ஏகபோகத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றன. ஆனால் இப்பொழுதோ கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் கட்சியின் ஏகபோகம் ஒரு புறம் இருக்க, கட்சியே ஆட்டங் காணத் தொடங்கி விட்டது. சோவியத்யூனியனிலேயே கொம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் ஏகபோகம் எவ்வளவு காலம் நீடித்திருக்கும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. அண்மையில் நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகளின் இரண்டாவது கொங்கிரஸ், இப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சோவியத் அரசமைப்பின் 6 வது ஷரத்தை விவாதிப்பதில்லை என ஒரு சில பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானித்தது. ஆனால் பெரிஸ்த்ரோய்க்கா தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இப் பிரச்சினை மீண்டும் எழும், இந்தத் தசாப்தத்திற்குள் சோவியத்யூனியனில் பல கட்சி முறை தோன்றுவதைத் தடுக்க முடியாது என்பதே எனது ஊகம்.

லெனின் வகுத்த 'முன்னணிக் கட்சி' என்ற கோட்பாடு இப்பொழுது கிழக்கு ஐரோப்பாவில் தூக்கி எறியப்பட்டு வருகின்றது. இக் கோட்பாட்டின்படி, வரலாற்றின் இயக்கம் பற்றிய மேலான புரிந்துணர்வு கட்சியிடம் மட்டுமே இருப்பதனால், அதுவே சோஷலிச குறிக்கோள்களை நோக்கி சமுதாயத்திற்கு வழிகாட்டி நெறிப்படுத்துவற்குத் தகைமை வாய்ந்ததாகும். ஆனால் இன்றோ இந்தக் கோட்பாடு அந்தளவிற்கு வெறுப்பிற்குள்ளாகி இருப்பதனால், தமது கட்சிப் பெயர்களையே கழற்றி வீசுவதற்கு கிழக்கு ஐரோப்பிய கொம்யூனிஸ்ட் கட்சிகள் முந்திக் கொள்கின்றன.

ஸ்ராலின் பாணி சர்வாதிகாரத்தின் நடைமுறையே, இந்தக் கோட்பாடு நிராகரிக்கப்படுவதற்குக் காரணம் என நினைப்பது பாரிய தவறாகும். ஏனென்றால், அதிகார சமத்துவமின்மை இக்கோட்பாட்டின் உட்கிடையாகும். புரட்சிகர உயர் குழாத்திற்கு வாய்க்கப் பெற்றுள்ள மேலான அறிவால், ஏனையவர்களை வரலாற்றுக் குறிக்கோள்களை நோக்கி வழி நடாத்தி நெறிப்படுத்துவதற்கு தாமே உரிமையுடையவர்கள் என்ற எடுகோள், பல்வேறு கருத்துக்கள், திறந்தவிவாதம், சுதந்திரமான தேர்வு ஆகியவற்றுடன் முற்றுமுழுதாக முரண்படுகின்றது. எனவே, நடைமுறையைப் பொறுத்தவரையில் லெனினுடைய யுகம் என்றால் என்ன, ஸ்ராலினின் யுகம் என்றால் என்ன, மாறுபட்ட கருத்துக்களை ஏதோ ஒருவகையிலும், அளவிலும் அடக்கியொடுக்காமல், கொம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிப் பங்கு நிலை நாட்டப்படவில்லை.

யதார்த்த உணர்வுபடைத்த சில மார்க்சியவாதிகள் இதனை ஒப்புக்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன். ஆனால் முன்னணிக் கட்சியின் கரங்களிலே அதிகாரம் இவ்வாறு குவிமையப் படுத்தப்பட்டதை, அவர்கள் இரு அடிப்படையில் நியாயப்படுத்த விழைகின்றனர்;

(1) சமூக அமைப்பை வேகமாகவும், முற்றும் முழுதாகவும் மாற்றியமைத்து உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தி செய்வதை இத்தகைய அதிகாரக் குவிமையம்தான் உத்தரவாதப்படுத்துகின்றது.

(2) பொருளாதார சமத்துவ நிலையினை எய்துவதற்கு, அரசியல் சுதந்திரத்தைத் தற்காலிகமாக விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது.

முதலாவது அம்சத்தைப் பொறுத்தவரை எனது விடை வருமாறு: எந்தத் தராசில் உயிரிழப்புக்களையும், தனி மனித சுதந்திர இழப்பையும் சிந்தனைச் சுதந்திர இழப்பையும் எடைபோடுவது? ஸ்ராலினின் ஆட்சிக்காலத்தில் 2 கோடி மக்கள் உயிரிழந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. ருமேனியாவில் 25 ஆண்டு காலம் சீசெஸ்கு ஆட்சி புரிந்தார். அவரது ஆட்சிக்காலத்தில் 60 ஆயிரம்பேர் உயிரிழந்தனர். இம் மாபெரும் மனித இழப்புகளுக்கும் துயரங்களுக்கும் ஈடாக பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டதோ என்று பார்த்தால், அதுகூட சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோபபிய நாடுகளிலும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். அங்கு அதிகாரிகளின் கைகளில் குவிந்திருந்த அதிகாரம், பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது. ஆதலால் ஒரு தராசுத்தட்டில் பொருளாதாரம் சார்ந்த வளர்ச்சியையும், மறுதட்டில் மனித அவலங்களையும் வைத்து நாம் சரியான எடை காண முடியாது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

### 13-3-90 செவ்வாய்

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்தியப் படைகளை தமிழகம், ஆந்திராவில் தயார் நிலையில் வைத்திருக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளதாகச், செய்தி வெளியானது அமைதியை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு இது பொன்னான நேரம்; தவறினால் இறுதிப் போர் மூளும் என ஈரோஸ் பாலகுமார் தெரிவித்தார் ☐ அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது அரசின் பலவீனத்தைக் காட்டுமென, முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தெரிவித்தார் ☐ திருகோணமலை நகரிலிருந்து இந்தியப் படையினர் முற்றாக விலகிச் சென்றனர் ☐ பௌத்த சாசன நிதியச் சட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த திருத்தம், 7 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது ☐

### 14-3-90 புதன்

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க அரசு முயற்சி எடுத்து வருவதாகச், செய்தி வெளியானது ☐ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 50 பேர், அச்சுவேலியில் விடுவிக்கப்பட்டனர் ☐ செவ்வாயன்று பௌத்த சாசன நிதியச் சட்டமூலத்தின் மீதான வாக்கெடுப்பின்போது மதிய இடைவேளையில் இடம் பெற்ற நாடாளுமன்ற நிகழ்வுகளை ரத்துச் செய்யுமாறு, அரசாங்கக் கட்சியினர் சபையில் கோரிக்கை விடுத்தனர்; எதிர்கட்சியினர் ஆட்சேபம் தெரிவித்தனர் ☐ ஹற்றன் ஸ்ரீபாத கல்லூரியில் 200 மாணவர்கள், மதிய உணவின் பின்னர் வயிற்றுவலி காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் ☐ 5 ஆண்டுகளின் பின்னர், தமது வசிப்பிடங்களுக்குத் திரும்பிய கொக்கிளாய்ப் பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர் ☐

### 15-3-90 வியாழன்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா, யாழ்நகர் வந்தார். கட்சி அமைப்பாளர்களையும் ஆதரவாளர்களையும் அவர் சந்திப்பார் ☐ அகதிகள் என்ற போர்வையில், ஜே.வி.பினர் திருகோணமலை செல்கின்றனரென்றும், இதன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரஞ்சன், செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார் ☐ இரவு எட்டரை மணியளவில், தெஹிவளையிலுள்ள நகைக் கடையில் ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கமும் கொள்ளையடிக்கப்பட்டன ☐ கொழும்பு மத்திய வீதியில் அரிசி லொறியைக் கடத்திய ஆயுதபாணிகளான 3 தமிழ் இளைஞர்கள், கைது செய்யப்பட்டனர் ☐

### 16-3-90 வெள்ளி

சிறுபான்மை இன மக்களின் உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கி, அவர்களுடன் இணைந்து இந்நாட்டினை உறுதியான நாடாகக் கட்டி எழுப்புவோம் என, புத்தளத்தில் ஜனாதிபதி தெரிவித்தார் ☐ 'முஸ்லிம்களின் தாய் மொழி தமிழல்ல; அரபு மொழியே' என, தென்மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்கார் காலியில் தெரிவித்தார் ☐ ஒரிஸ்ஸாவில் தங்கவைக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களைத் தாக்கப் போவதாக, பழங்குடி அமைப்புகளும் எதிர்க்கட்சியினரும் அச்சுறுத்தினர் ☐

### 17-3-90 சனி

கட்டுநாயக்காவிலுள்ள ரேடாரில் பதிவான மர்மப் பொருள் அந்நிய வேவு விமானமாக இருக்கலாமென, அதிகாரிகள் தெரிவித்தனர் ☐ திருமலையில் அமைதி தொடருவது உறுதி என, புலிகளுடனான திருமலைச் சந்திப்பின் பின் அமைச்சர் ஹமீத் தெரிவித்தார் ☐ ஒற்றையாட்சியின் கீழ்தான் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென, ஐ.ம.வி.மு. தலைவர் த. சித்தார்த்தன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் ☐ இந்தியத் தூதர் அமைதிப்படையின் உயர் அதிகாரிகளுக்கு அளித்த விருந்தில், இந்தியப் படை இலங்கையில் புரிந்த சாதனைகளை ஜே.ஆர்.ஜயவர்த்தன பாராட்டினார் ☐

### 18-3-90 ஞாயிறு

இலங்கைக்கு வந்த அமைதிப்படையினர் தமது நோக்கங்களில் வெற்றியடைய முடியவில்லையென, ஆனைமடுவில் ஜனாதிபதி தெரிவித்தார் ☐ அரசியலமைப்பின் 6 ஆவது திருத்தம் நீக்கப்படுவதை எதிர்க்கப்போவதாக, அறிக்கையொன்றில் முஸ்லிம் கொங்கிரஸ் தெரிவித்தது ☐ வட—கிழக்கு மாகாண நிர்வாகத்தைச் சீராக்க ஆளுநர் 'நளின்' துரித நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்தி வெளியானது ☐

### 19-3-90 திங்கள்

ஈராண்டுகளின் முன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியை நினைவுகூரும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின; ஒரு மாதம் வரை இவை நீடிக்கும் ☐ யாழ்நகரில் 65 லட்சம் ரூபா செலவில் முறைசாராக் கல்வி நிலையம் அமைக்கப்படுமென, செய்தி வெளியானது ☐ அரச, கூட்டுத்தாபன நியமனங்களில் அரசியல் தலையீட்டுக்கு ஜனாதிபதி தடை விதித்தார் ☐ பிரச்சினைக்குரிய இலங்கையின் முதலாவது எயிட்ஸ் நோய்க் கர்ப்பிணிப் பெண், கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் ☐

## தொடக்க நினைவுப் பேருரை

மருத்துவக் கலாநிதி அருணாசலம் சிவபாதசுந்தரம் அவர்களின் தொடக்க நினைவுப்பேருரையை மருத்துவக் கலாநிதி வி. கிருஷ்ணராஜா அவர்கள் மார்ச் 26 ஆம் திகதி திங்கட்கிழமை, பிற்பகல் 4.00 மணிக்கு, யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்துவார்.

காலஞ்சென்ற மருத்துவக் கலாநிதி சிவபாதசுந்தரம் இந்திய அமைதிப்படையால் கடமை நேரத்தில், யாழ். ஆஸ்பத்திரியில், ஒக்டோபர் 87 இல் சுட்டுக் கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொம்யூனிஸ்ட்....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது அம்சத்தைப் பொறுத்தவரை நான் அளிக்கக்கூடிய விடை இதுதான்: அரசியல் சுதந்திரத்தை எந்த வகையிலும் பொருளாதார சமத்துவத்தோடு பண்டமாற்றுச் செய்ய முடியாது 'நடைமுறையிலுள்ள சோஷலி'சத்தின் முழு அனுபவமும் இதனை நிரூபிக்கின்றது

பொருளாதார சமத்துவத்தைப் பொறுத்தவரை சோஷலிச சமுதாயங்கள், மூன்று கட்டங்களைத்தாண்டியுள்ளன. முதல் இரண்டு கட்டங்களும் சோவியத்யூனியனில் நிகழ்ந்தன; மூன்றாவது சட்டம் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் நிகழ்ந்தது.

முதலாவது கட்டத்தில், மக்கள் புரட்சியின் மூலமே சோவியத் ஆட்சி தோன்றியதால், அரசியல் உயர் மட்டத்திலும் உயர் அதிகாரி மட்டத்திலும் சொகுசுகள் எதுவுமே அற்ற மிக எளிய வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்த புரட்சிகர உணர்ச்சி விரவியிருந்தது இரண்டாவது கட்டம் ஸ்ராலின் யுகத்தில் நிகழ்ந்தது. பழைய வர்க்க வேறுபாடுகளுக்குப் பதிலாக புதிய வர்க்க வேறுபாடுகள் தோன்றின. ஆற்றலுக்கும், முயற்சிக்கும் பொருளாதாரத் தூண்டுதல் அளிக்கும் வகையிலும், அதிகார அமைப்பின் மேல்தட்டில் உள்ளவர்களின் விசுவாசத்தினை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார சமத்துவமின்மையும் சலுகைகளும் வளர்க்கப்பட்டன.

(தொடரும்)

## இரு பாடசாலை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டமிருந்து மேலும் பல நல்ல படைப்புகளை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையிருக்கிறது. அவருக்கு ஊக்கமளித்து ஹாட்லியில் இத்தகைய நாடகங்களை அறிமுகப்படுத்திய கல்லூரி அதிபர் T. பாலசிங்கமும், ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

வடமராட்சியைப் பொறுத்தவரையில், பாரம்பரிய நாடகங்கள் முன்பு செழித்து வளர்ந்த களமாகும். மாதனை, தும்பளை அல்வாய், கற்கோவளம், கரவெட்டி போன்ற இடங்கள் இசைநாடகங்களுக்குப் பெயர் போனவை. சிறுவர் நாடகங்களுக்கான வித்து இப்பொழுது தான் இங்கு — ஹாட்லிக் கல்லூரியில் — ஊன்றப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வடமராட்சியின் ஏனைய கல்லூரிகளும் இம் முன்மாதிரியைக் கவனத்தில் எடுத்தால், நல்ல சிறுவர் நாடகங்கள் அறுவடையாகலாம். ஏனெனில் இந்த மண்ணில் ஏற்கனவே நாடகப் பண்பு ஊறிக்கிடக்கிறது. ☐

## மனிதனும்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரி மனிதனது சகல குறைபாடுகளும் உடைய இவர்கள், தமக்குக் கைவரப்பெற்ற கலைத் திறமையைக் கொண்டு தமது குறைபாடுகளை ஆய்வுக்குள்ளாக்கி, உயர் மனித நிலைக்கு உயர முற்படுபவர்கள். அதனால் சமூகத்தையும் அந்நிலைக்கு உயர்த்த வழிவகுப்பவர்கள். இவர்களே இன்று தேவைப்படும் எழுத்தாளர்கள்.

''இவர்களை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்?''

''அவர்கள் தான் உண்மையான மக்கள் எழுத்தாளர்கள் என்பேன்.'' ☐

## உலகின் சிறந்த...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கட்டில் மட்டுமல்ல, கல்வியிலும்கூட இம்ரான் சளைத்தவர் அல்லர் என்பது எம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்! ஆம், இம்ரான் ஒக்ஸ்ஃபோட் பல்கலைக்கழகத்தில் அரசியல். பொருளியல் ஆகிய துறைகளில் திறமைச்சித்தி பெற்ற ஒருவராவர்!. 'Cricket Life'' என்ற விளையாட்டுத் துறைச் சஞ்சிகைக்கும் இவர் ஆசிரியராக இருக்கிறார். எனினும் இம்ரானுக்கு விருப்பமில்லாத ஒன்று அரசியல். ''In cricket you can get out of the lime light. But in Politics you can't'' என்று, அருமையாகக் கூறுகிறார் இவர். எந்த ஆணையும் போல தனது திருமண விடயத்தில், இவர் மிகவும் ஜாக்கிரதையாக உள்ளார். ''பாகிஸ்தானியப் பெண்ணையே திருமணம் செய்வேன்'' என்று அடிக்கடி கூறுகிறார்.

இன்றைய கிரிக்கட் அரங்கத்தில் உள்ள பெரும்பாலான வீரர்கள், தன்னல நோக்கில் சாதனை புரிபவர்கள். ஆனால், நாட்டுக்காகவே சாதனை புரியும் ஒரு வீரர் என்றால் அது இம்ரானேதான். ''Ultimately a national cricket team needs those players who are burning to play for their country'' என்று கூறியுள்ளதோடு மட்டுமல்லாமல், அதற்குச் செயல் வடிவமும் கொடுக்கிறார். பாக். அணிக்குத் தலைவராக உள்ளதோடு மட்டுமல்லாது பாக். அணியைக்கூட இவரே தெரிவு செய்கிறார்.

இவ்வாறெல்லாம், பாக். அணியின் மூலைக்கல்லாக விளங்கும் இம்ரானை ஒரு சகல துறை மனிதன் என்று கூறுவதிலும், 1989 – 90 ஆண்டுக்கான உலகின் சிறந்த கிரிக்கட் வீரர் என்று கூறுவதிலும் தப்பேதும் இல்லை! தொடரட்டும் இவரது சாதனைகள்! ☐

## பெண்களையும்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளன. மதரிபூர் சட்ட உதவிச்சங்கம் அவற்றில் ஒன்று.

வறிய மக்களுக்கு உதவும் புனித நோக்கத்துடன் 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அச்சங்கத்தின் தலைவராக சமூகத் தொண்டர் முகம்மது அத்தாயுக் ரஉற்மான் பதவி வகிக்கிறார். செயலாளராக மதரிபூர் வழக்கறிஞர் பஸ்லுல்லா கடமையாற்றுகிறார். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவில் இரண்டு பெண்களும் அங்கம் வகிக்கின்றனர்.

மக்களிடம் அவர்கள் உரிமைகள் பற்றிய உணர்வை ஏற்படுத்துவதே, அந்தச் சங்கத்தின் பிரதான குறிக்கோள்.

கண்டபடி விவாகரத்துச் செய்யும் கணவன்மாரிடமிருந்து மனைவியருக்குப் பாதுகாப்பு அளிப்பது, கைவிடப்பட்ட பெண்களுக்கு அவர்களின் கணவன்மாரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுக் கொடுப்பது, ஏழைகளுக்குச் சட்ட உதவி கொடுப்பது என்பன மற்ற நோக்கங்கள்.

மதரிபூரைச் சுற்றியுள்ள நான்கு உயர்மாவட்டங்களில், அச்சங்கம் கிளைகளை அமைத்துள்ளது. சட்ட உதவி பெற வசதியற்றோருக்கு இலவச சட்டவசதி வழங்குகிறது.

இப்பொழுது அது, தன் செல்வாக்கை நாடுமுழுவதும் பரப்பத்திட்டமிட்டுள்ளது அதற்காக மனித உரிமைகள் மகாநாட்டை நடத்துகிறது; சட்ட உதவித் திட்டத்தை விரிவுபடுத்துகின்றது.

நன்றி: பானோஸ் ☐

## உடலும்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் செய்யவேண்டும் என்பதில்லை. உங்கள் மனதிற்குப் பிடித்ததை – இனிய பொழுதுபோக்கான எதையும்—செய்யுங்கள். ஆனால் மனைவி மக்களுடன் சேர்ந்து குதூகலித்துச் செய்யுங்கள்; அதுதான் இங்கு பிரதானம்.

திருமணம் ஆகாதவர்களாயின் தன் வயதை ஒத்த உறவினருடனோ அல்லது நண்பர்களுடனோ சேர்ந்து இவ்வாறு ஞாயிற்றுக் கிழமையைக் கழிக்கலாம்.

### விளையும் பயன்

இதனால் விளையும் பயன் என்ன?

மறுவாரத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய கருமங்களைத் திறம்படச் செயலாற்றும் சக்தியை அன்றே நீங்கள் பெற்றுவிடுவீர்கள்.

திங்கட்கிழமை தொடக்கம் அடுத்து வரப்போகும் ஞாயிற்றுக்கிழமையை எதிர்நோக்கியவாறே உங்கள் கருமங்களை நீங்கள் வெகு உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் செய்து முடிப்பீர்கள் என்பது திண்ணம்.

நாங்கள் இளமை தொடக்கம் இன்றுவரை, மாதாமாதம் வரும் பௌர்ணமி நிலவை எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருப்பதில்லையா? இந்த ஞாயிற்றுக்கிழமையும் அந்தவகையில் ஒன்றுதான்.

இதை மீண்டும் ஒரு முறை படியுங்கள்.

செயற்படுத்திப் பாருங்கள்; கட்டாயம் பயன் அடைவீர்கள். ☐

திசை
THISAI

# ஒரிஸ்ஸாவில் ஒளித்து விளையாடல்!

சென்ற வாரத் திசை இதழில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத் தலைவரின் தலைமறைவு குறித்தும் ஏனைய அவர்களது ஆதரவாளர்கள் ஒரிஸ்ஸாவுக்குக் கப்பல் ஏற்றப்பட்டது குறித்தும் சில சந்தேகங்களை எழுப்பியிருந்தோம்.

இந்தச் சந்தேகங்களை, உறுதிப்படுத்துவதுபோல் ஒரிஸ்ஸாவில் 'அகதிகளாக'க் குடியமர்த்தப்பட்ட மேற்படி இயக்கத்தினரில் ஏறக்குறைய 800 பேர் வரை முகாம்களிலிருந்து தப்பியோடி காடுகளுக்குள் புகுந்துவிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு தப்பியோடியவர்கள் மீண்டும் பிடிக்கப்பட்டு, முட்கம்பி வேலிகளால் சூழப்பட்ட முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பின்வந்த செய்திகள் கூறுகின்றன.

இவ்வளவு பெருந்தொகையினர், அதுவும் ஓர் அன்னிய நாட்டில், காவலாளிகளின் கண்களிலே மண்ணைத் தூவிவிட்டு தப்பிஓடி 'ஒளித்து விளையாடுகின்றார்கள்' என்ற கதை நம்பக் கூடியதா?

இந்தப் போராளி அகதிகளை ஒரிஸ்ஸா ஏற்றுக்கொண்டதால் தன்னைச் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளதாக முதலமைச்சர் பட்நாயக் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஒருபுறம், ஆதிவாசிகள் இவர்களை அங்கு குடியேற்றுவதை எதிர்க்கின்றனர். மறுபுறம் இலங்கைப் போராளிகளை அங்கு தங்க அனுமதிப்பதால் ஒரிஸ்ஸா மாநிலம் நக்ஸலைட்களின் தளமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என, மாநில அரசு அஞ்சுகிறது. எந்த வழியிலே பார்த்தாலும் ஒரிஸ்ஸாவின் நிலை ஆபபிழுத்த குரங்கின் கதைதான் எனச் சொல்லப்படுகிறது.

'தப்பி ஓடிய' இவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இவர்களுக்குப் பயிற்சி அளிக்க இந்தியா நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்பாக இந்தத் 'தப்பி ஓடல்' திட்டமிடப்பட்டுள்ளதாக, அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த 'ஒளித்து விளையாடல்' இந்தியாவின் திருவிளையாடல்களில் ஒன்றா?

# இசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

## பெண்ணின் ஆண்மை

பெண்ணிலைவாத அலைகள் மேலோங்கிவரும் இன்றைய சூழலில், உண்ணாவிரதம் இருந்து தன்னுயிரைத் தியாகம் செய்த பூபதி அம்மையாரின் நினைவுகூரல் நிகழ்ச்சிகள் மிக முக்கியம் வாய்ந்தவையாக நிற்கின்றன.

பூபதி அம்மையாரின் இம் மகத்தான செயல், பெண் என்பவள் எந்த ரீதியிலும் ஆணுக்கு, இரண்டாம் பட்சமானவள் அல்ல என்பதை மிக நிமிர்வோடு கூறி நிற்கிறது.

மனித இனத்தில், பெண் என்பவள் ஆணின் உடல் வலுவுக்குச் சமதையானவள் அல்லாதிருப்பதும் அத்தகைய உடலாற்றல் போட்டி உலகில் அவள் அவனுக்கு ஈடுகொடுக்க முடியாதவள் என்பதாலும், அவள் ஆணுக்கு இரண்டாம் பட்சமானவள், குறைவுடையவள் எனக் கருதப்பட்டுவரும் மரபுரீதியான ஆண்நிலைவாத உலகின் நோக்கு பேதமையானதும் பிழையானதுமே.

இப்பிழையான ஆண்முனைப்புக் கருத்துக்கள் வலுக்கொண்டிருப்பதற்கும், கொள்வதற்கும் உரிய காரணம் இன்றைய பெண்ணிலைவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர், மேலோட்டமான மேற்கத்தைய கருத்துக்களால் பாதிக்கப்பட்டவராய் பெண்ணின் உண்மையான ஆற்றலை இடம் தவறி அழுத்த முற்படுவதேயாகும்.

பெண்ணின் உடலமைப்பு என்பது, அவள் தாய்மையாகும் தன்மையிலிருந்தே ஆணிலிருந்து வேறுபடுகிறது. இத்தாய்மை என்னும் ஸ்தானத்திலிருந்து அவள் சமூகத்திற்கு ஆற்றும் பங்கு ஆண்களால் எவ்விதத்திலும் ஈடுகொடுக்கவோ போட்டிபோடவோ முடியாத ஒன்று. மேலும் ஏனைய சிந்தனை செயல் என்பவற்றிலும் அவள் ஆணுக்குச் சமமானவளே. இந்நிலையில் அவளது தேவையும், பங்களிப்பும் இரட்டிப்பு மடங்கானது என்பதில் அவள் ஆணைவிட மேம்பட்ட நிலையிலேயே இருக்கிறாள்.

மேலும் அவளிடமிருந்து வெளிவரும் உணர்வுகளும், சிந்தனைகளும் சகலவற்றையும் இலகுவில் ஆட்கொள்ளும் ஆழமான தன்மை கொண்டவை. அதனால் ஆண்மை மிக்கவை. இதனாலேதான் ஆணுக்கே சொந்தமானதெனக் கொள்ளப்பட்ட வீரதீரப் போர்க்களச் செயல்களில்கூட பெண்மையை முதன்மைப்படுத்தும் வகையில் வீரத்தையும் 'தாய்' என்று அழைக்கும் மரபுக்குட்பட்டுள்ளோம்.

பூபதி அம்மையார் தனது உண்ணாவிரதத்தின் மூலம் செய்த உயிர்த்தியாகம் இத்தகைய ஆண்மைமிக்க, ஆழமான உணர்வுக்கு நல்ல உதாரணம். ஆணும் பெண்ணும் செயலால் உணர்வால் சிந்தனையால் ஒன்றானவர்களே என்பதன் நிரூபணம் இது.

ஆனால் இத்தகைய ஆற்றலைக் கொண்டுள்ள பெண்ணினம், தமக்குரிய ஆற்றலை, நல்லவற்றைச் செயற்படுத்த ஒருமுகப்படுத்த வேண்டும். இந்த ஒருமுகப்படுத்தல், மேலோட்டமான பெண்ணிலைவாதக் கருத்துக்களால், மேற்குலகில் நிலவும் சகலவற்றுக்குமான 'தாராண்மைக்'' கருத்துக்களால் சிதறடிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

# 4000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

இவ்வாண்டு பரீட்சைகளுக்குத் தோன்றிச் சித்தி பெற இருக்கும் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு உயர் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் உள்ள வெற்றிடங்கள் குறித்து தகவல்களை இவ்வமைச்சு சேகரித்து வருவதாகவும் இவ்வாண்டு பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற இருக்கும் 4000 பட்டதாரிகளுக்கு அமைச்சு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டு இருப்பதாகவும் அறியப்படுகிறது.

# வெளிவாரிப் பட்டதாரிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமா?

பலஆண்டுகளுக்குப் பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டதாரிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றன.

இப்பரீட்சைகள் ஏப்ரில் மாதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற பெற இருப்பதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் முன்னர் குழப்பநிலை நிலவியதால் பல ஆண்டுகளாக இப்பரீட்சைகள் இங்கு நடைபெறவில்லை. இம்முறையும் யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு கொழும்பு, பேராதனை போன்ற இடங்களிலேதான் பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பரீட்சார்த்திகளின் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து, யாழ்ப்பாணத்திற்கு வெளியே பரீட்சை எடுப்பதில் உள்ள சங்கடங்களை விளக்கியதன் பயனாக, இம்முறை யாழ்ப்பாணப் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணத்திலேயே பரீட்சையை எடுப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என அந்த அதிகாரிகள் உறுதியளித்ததாக திசை அறிகின்றது.

# அன்னை பூபதி நினைவு தினங்கள்

இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குமான கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில், உண்ணாவிரதமிருந்து உயிர் விட்ட அன்னை பூபதியின் நினைவாக, இம்மாதம் 19 லிருந்து வரும் மாதம் 19 ஆம் திகதி வரை வடக்கிலும் கிழக்கிலும் எழுச்சி நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

1988 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம திகதி தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்த அன்னை பூபதி, ஏப்ரில் 19 ஆம் திகதி கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் உயிர் துறந்தார். இவருக்கு முன்பாக இதே கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்த, மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அன்னம்மா டேவிற்றின் உண்ணாவிரதப்போராட்டம் குழப்பப்பட்டதும், கொச்சைப் படுத்தப்பட்டதும் தெரிந்தது. அன்னம்மா டேவிற்றின் உண்ணாவிரதம் குழம்பினதால் உண்டான அபகீர்த்தியை அன்னைபூபதி உயிரைக் கொடுத்து நீக்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மீள வேலைக்கமர்த்துவதில் ஒழுங்கீனங்கள்

## ■ ஒன்றியத்தின் குற்றச்சாட்டு

ஓய்வு பெற்றவர்களை மீண்டும் வேலைக்கமர்த்துவதில் ஏற்பட்டுள்ள சில ஒழுங்கீனங்களை ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், பொறியியலாளர் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்குச்சமர்ப்பித்துள்ள மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

மீள வேலைக்கு அமர்த்தும் திட்டத்தில் 55 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும், இளம் ஆட்களுக்குமே இடமளிக்சப்படவேண்டுமென அரசாங்கம் விருப்பியுள்ளபோதிலும், இந்த வரவேற்கத்தக்க முடிவுக்கு அமைவாகவே, வேறு பிராந்தியங்களில் மீள வேலைக்கு அமர்த்தல் நடைபெற்று இருப்பதாகவும், ஆனால் வடபிராந்தியத்திலோ வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்தக் கொள்கையை மீறும் வகையில் 55 வயதுக்கு மேற்பட்டவர்களையும், தொழில் நுட்ப உத்தியோகத்தர் அல்லாதவர்களையும் மீள வேலைக்கு அமர்த்தும் திட்டத்தில் சேர்த்துள்ளதாக மகஜரைச் சமர்ப்பித்துள்ள ஒன்றியத்தின் செயலாளர் திரு. எஸ். இராசநாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வடபிராந்தியத்தில் மீள வேலைக்கமர்த்தப்பட்டவர்களில் சிலர் நெடுஞ்சாலைகள் திணைக்களத்துடன் எதுவித தொடர்புமற்றவர்கள் என்றும், முன்பு அவர்கள் வேறு திணைக்களங்களில் வேலைபார்த்தவர்கள் என்றும் மகஜர் குறிப்பிடுகின்றது.

வடக்கு,கிழக்கிற்கு புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் நெடுஞ்சாலை புனரமைப்பு ஆலோசகர்கள் சபையிலும் இத்தகைய ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பதாக ஒன்றியம் குற்றஞ்சாட்டி, இந்நிலை குறித்து ஜனாதிபதி உடனடியாக விசாரணை நடத்தவேண்டுமென்றும் மகஜர் வற்புறுத்தியுள்ளது.

# நமீபியா விடுதலை

23 ஆண்டுகாலக் கெரில்லாப் போராட்டத்தின் பின், நமீபியா கடந்த 21 ஆம் திகதி புதன் நள்ளிரவில் சுதந்திரமடைந்தது. அங்கு நிகழ்ந்த வைபவம் ஒன்றில் தென்னாபிரிக்கக் கொடி இறக்கப்பட்டு, சுதந்திர நமீபியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. மேற்படி வைபவத்தில் நமீபியாவின் புதிய ஜனாதிபதி சாம் நுஜோமாவும், தென்னாபிரிக்க ஜனாதிபதி கிளார்க்கும் கலந்து கொண்டார்கள். சுதந்திர நமீபியா, விடுதலையடைந்த தென்னாபிரிக்காவின் கடைசிக் கொலனியாகும். கடந்த 75 ஆண்டு காலமாய் தென்னாபிரிக்க அடக்கு முறையின் கீழ் விட்டுக்கொடாது போராடிய நமீபியர்கள் இன்று விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 23-3-1990 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. D. / 83 / News / 90.